# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, தை 21 உ (3-2-74) ஞாயிறு ஜனவரி 3 மூறை 9 -புத்தகம் 27 இதழ் - 23


## அமிர்தலிங்கம் யார்?

சனவரி 10ம் நாள் சம்பவத்தின்போது [illegible] இறந்தது பற்றி யாழ்ப்பாணத்தில் இப்போது மரணவிசாரணை நடைபெற்றுவருகிறதல்லவா?

இந்த விசாரணையின்போது ஒரு கட்டத்தில் நீதவான் திரு. பாலசிட்டணர் திரு. அமிர்தலிங்கம் அவர்களை நீதிமன்றத்தைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

அச்சமயத்தில், அங்கு பிரசன்னமாயிருந்த முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை அவர்கள் நீதவானைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்:-

"SIR, MR. AMIRTHALINGAM IS NOT ONLY A LAWYER. HE IS THE UNDISPUTED LEADER OF THE UNQUESTIONABLE TAMILS"

''ஐயா, அமிர்தலிங்கம் ஒரு சட்ட அறிஞர் மாத்திரமல்ல—அவர் உண்மையான தமிழர்களின் ஏகோபித்த தலைவருமாவர்.''

—இதன்பின் சிறிது நேரத்துள் திரு. அமிர்தலிங்கம் மீண்டும் நீதிமன்றத்துள் அனுமதிக்கப்பட்டார்.

## இந்திரா-சிறிமா ஒப்பந்தத்திற்கு

# கருணாநிதி கடும் எதிர்ப்பு!

சிறிமா - சாத்திரி ஒப்பந்தத்துக்குள் இடம்பெறாத ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் நாடற்ற இந்திய வம்சாவளித் தமிழர்களில் 75,000 பேரை இந்தியாவும் 75,000 பேரை இலங்கையும் ஏற்றுக்கொள்வதென்று புதுடெல்லியில் இந்திராவும் சிறிமாவும் செய்துகொண்ட உடன்பாட்டை தமிழக முதல்வரும் தி.மு.கழகத் தலைவருமான கலைஞர் டாக்டர் கருணாநிதி தமிழ்நாடு சட்டப் பேரவையில் கடுமையாக கண்டித்துள்ளார்.

''ஏற்கனவே ஏற்பட்டதால் இலட்சம் மக்களை இந்தியா ஏற்றுக்கொள்வதென ஒப்புக்கொண்டிருக்கிறது: இது லால்பகதூர் சாத்திரி செய்த தவறினால் ஏற்பட்ட நிலையாகும். இப்போது, தமிழக அரசை கலந்தாலோசிக்காமலே இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மேலும் 75,000 பேரை ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டுள்ளார். இதை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.''

என்றும் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் டெல்லிக்கு சென்றிருந்த இலங்கைப் பிரதமர், சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்திற்குள் வராத ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் நாடற்ற இந்திய வம்சாவளித் தமிழர்கள் சம்பந்தமாக இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து 75,000 பேரை இந்தியாவும் 75,000 பேரை இலங்கையும் ஏற்றுக்கொள்வது என்று முடிவு காணப்பட்டிருக்கிறது.

இந்திரா—சிறிமா ஒப்பந்தப்படி இந்தியா ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கும் 75,000 பேரையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஞானப்பிரகாசர் நினைவு விழா!

சுவாமி ஞானப்பிரகாசர் நினைவு விழா வெள்ளவத்தை கொழும்பு இம்பிரிகாசாய சென் தோமஸ் தேவாலயத்துக்கு அருகிலுள்ள மண்டபத்தில் 2.2.74 மாலை 5மணிக்கு நடைபெறுகிறது. விழாவில் திருவாளர்கள் ஈழவேந்தன், கரிகாலன், தாவீது அடிகள் ஆகியோர் பேசுகிறார்கள்.

# தமிழர் உரிமை மறுப்பதில் யூ. என். பி. குறைந்ததல்ல

### முருங்கனில் — உடுவில் பா. உ. முழக்கம்!

'சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, இந்நாட்டுச் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தாம்! தமிழினத்தை அழித்தொழிக்க வேண்டுமெனபதில் இரண்டும் ஒரே கருத்துக் கொண்டவையே!

புதிய அரசியலமைப்பில், தமிழ் பேசும் மக்களுடைய மொழி, இன, மத உரிமைகளை மறுக்கும் விதிகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசு சேர்த்தபோது—யூ. என். பி. அவற்றை முழுக்க முழுக்க ஆதரித்து நின்றதே தவிர, ஒரு சொல்கூட எதிர்ப்பு தெரிவிக்கவில்லை!

மதத்தைப் பொறுத்த வரையில் — அரசாங்கத்திலும் பார்க்க யூ. என். பி. மேலும் ஒருபடி தீவிரமாகவே நின்றது. பௌத்த மதத்துக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று கூறியது. யூ. என். பி. யோ தனியிடம் கொடுக்கப்படவேண்டுமென்று பிடிவாதமாக நின்றது. இந்நாட்டில் சிறுபான்மை மதங்களான இஸ்லாமிய, இந்து, கிறித்தவ மதங்களின் உரிமை பறிபோவது பற்றி யூ. என். பி. கவலைப்பட்டதில்லை.

அப்படியானால், யூ. என். பியுடன் ஏன் ஒத்துழைத்தீர்கள் சில பல விடயங்களில் என்று ஒரு கேள்வி எம்மை நோக்கி எழுகிறது. நான் தேசிய அரசப் பேரவையில் கூறியதைப்போல— எங்களுடைய உரிமை மறுப்போரை எதிர்ப்பதில் பேயுடன் மட்டுமல்ல — பேயின் பெத்தாச்சியுடன் கூட ஒத்துழைக்கத்தயார் என்பதே எமது பதிலாகும்.

1960 சிறிலங்காசுதந்திரக் கட்சியோடு சேர்ந்து தமிழுமையை மறுத்த யூ. என். பியை எதிர்த்து, அந்த அரசை வீழ்த்தினோம்.

1965ல் தமிழ் இனத்தின் சில உரிமைகளை வழங்க யூ. என். பி. ஒப்புக்கொண்டதால் அதற்கு ஒத்துழைப்புத் தந்தோம்;

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன். சனவரி 10ம் நாளன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் இருச்சிப் பேராசிரியர், இஸ்லாமிய அன்பர் நயினார் முகம்மது பேசிக்கொண்டிருந்த நேரத்தில் கடைசி நாள் கூட்டத்தில், திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் மீது பொலிசார் நடத்திய தாக்குதலின் விளைவினால், 9 பேர் உயிர்துறந்தனர்; பலர் படுகாயம் அடைந்தனர் பெண்கள் சேலைகள் இழுபட்டு மானத்தை இழந்தனர்.

இதுபற்றி கொழும்பிலிருந்த நான், 10ம் திகதி இரவே யூ. என். பித்தலைவர் ஜே. ஆருடன் தொடர்பு கொண்டேன். 11ந் திகதி காலை அவருடைய இல்லத்தில் அவரைச் சந்தித்தும் இதுபற்றிக்கூறினேன்.

இதெல்லாம் செய்தும் ஐ. தே. கட்சி உயிர் இழந்த தமிழர்களைப்பற்றி ஒரு வார்த்தை அனுதாபம்கூடத் தெரிவிக்க முன்வரவில்லை. தமிழ் மக்கள் பொலிசாரால் மிருகத்தனமாக தாக்கப்பட்டது பற்றி அவர்கள் அக்கறை கொள்ளவும் இல்லை!

அப்படிப்பட்ட கட்சிக்கு தமிழ் பேசும் மக்களாகிய உங்கள் மத்தியில் வந்து வாக்குகளைக் கேட்க என்ன உரிமையிருக்கிறது? என்ன தார்மீக பலம் இருக்கிறது?

அதுமட்டுமல்ல இடைத்தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக்கட்சியும், ஐ. தே. கட்சியும், இரண்டுமே எதிர்க்கட்சிகள்தாம். எனவே ஐ. தே. க. வை அனுப்பினால் ஏதாவது சாதனை பெற முடியும் என்றும் நீங்கள் எதிர்பார்க்க முடியாது!

— இவ்வாறு மன்னார் இடைத்தேர்தலில் போட்டியிடும் தமிழரசு வேட்பாளர் திரு ஜோன் மார்க்கை ஆதரித்து, முருங்கனில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய உடுவில் பா. உ. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

## சென்னையில் ஈழத்தமிழர் விடுதலைப்போர் கண்காட்சி!

ஈழத்தில் நடைபெற்றுவரும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் பத்திரிகை- புகைப்படக் கண்காட்சியொன்று 3-2-74ல் சென்னையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

சென்னை மத்திய நூலகத்தில் இடம்பெறவுள்ள இக்கண்காட்சியை உலகத்தமிழ் இளைஞர் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

## "யாழில் எழுந்த தமிழோசை"

●

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு பற்றி சுதந்திரன் ஆசிரியர் எழுதும் சுவையான தொடர் கட்டுரை!

●

படங்களுடன்— அடுத்தவார சுதந்திரனில் நிச்சயமாக ஆரம்பமாகிறது!

## கோபாலபிள்ளை மகாதேவா தரும் விளக்கம்!

"கருணாநிதிக்கு அழைப்பு அனுப்புவதில் கழுத்தறுப்பு நடைபெற்றதா?'' என்ற தலைப்பில் தமிழ் மக்கள் மத்தியில் எழுப்பப்பட்டுவரும் சில ஐயங்களை சென்ற வார சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம்.

அதுபற்றி தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் இணைப்பொதுச் செயலாளர்களில் ஒருவரான கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா சுதந்திரனுக்கு ஓர் விளக்க அறிக்கையை விடுத்துள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள விபரம் வருமாறு:—

''ஈழத்தின் எல்லா அமைச்சர்களுடன் இந்தியா, தமிழ் நாடு, சிங்கப்பூர், மலேசியா, உட்பட்ட வெளிநாடுகளிலுள்ள தமிழ்பேசும் அமைச்சர்கள் அனைவருக்கும் (வேறு குறிப்பிட்ட பிரமுகர்களுடன் சேர்த்து)தொடக்கவிழாவுக்கு மட்டுமே

(8-ம் பக்கம் பார்க்க)

# மாணிக்கவாசகர் ஆணைக்குழு விசாரணை இவ்வாரம் ஆரம்பம்!

சனவரி 10ம் நாள் — அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் பொதுக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொலிஸ் அட்டூழியங்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் ஆராய்வதற்கு யாழ்ப்பாண பொதுமக்களால் நியமிக்கப்பட்டுள்ள மாணிக்கவாசகர் ஆணைக்குழு தனது விசாரணையை 2-2-1974 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பிக்கவிருக்கிறது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் கடமையாற்றுகிறார்; ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. இரொட்சரும், அதி வண. கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்களும் கடமையாற்றுகின்றனர்.

2-2-74ல் இக்குழு தனது விசாரணையைத்தொடங்கும்போது—அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் முக்கியஸ்தர்கள் சிலர் சாட்சியமளிக்கவிருக்கின்றனர் இவ்விசாரணைகள்யாழ்ப்பாணம் 'பாம் கோட்டில்' நடைபெறவுள்ளது.

இவ்விசாரணைக் குழுவின் செயலாளராக கடமையாற்றும் திரு. அ. வே. வேற்பிள்ளை பின்வரும் விளம்பரத்தை பத்திரிகைகளில் பிரசுரித்துள்ளார்:-

அதி. வண. கலாநிதி சபாபதி குலேந்திரன் அவர்கள் உயர் திரு. ஒல்வல்ட் லெஸ்லி [illegible] உயர் திரு. வைத்திலிங்கம் மாணிக்கவாசகர் அவர்கள் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் 10ம் திகதி சனவரி1974 அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வந்த வெளிநாட்டு அறிஞருக்கு உபசாரஞ்செய்யும் கூட்டநாளிலும் அடுத்த நாட்களிலும் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றி விசாரித்து அறிக்கைசெய்ய யாழ்ப்பாணம் பொதுமக்கள் நியமித்துள்ளனர்.

''விசாரணைக் குழுவுக்கு உதவியாக இருக்கக் கூடிய அறிந்தவற்றையும் வேறு தகவலையும் தரக்கூடிய எல்லோரும் தங்கள் பெயர் விலாசம், ஆகியவற்றை எனக்கு 31-1-74க்கு முன் அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# "தமிழன்னையின் கண்ணீர் வீணாவதில்லை!

## யாழ் மாநகரப் படுகொலைக்கு இலங்கை அரசு கொடுக்க வேண்டிய விலையென்ன? இதை எதிர்காலமே தீர்மானிக்கும்"

### 'முரசொலி'யில்! கொடுமுடி சண்முகம் கட்டுரை!

யாழ் நகரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு தமிழ் நாடு சென்ற கொடுமுடி சண்முகன் அவர்கள் மேற்படி மாநாடு சம்பந்தமாக 18-1-74 'முரசொலி' ஏட்டில் ஓர் அருமையான கட்டுரையைத் தீட்டியுள்ளார். அக்கட்டுரையிலிருந்து ஓர் பகுதியே இங்கு இடம் பெற்றுள்ளது.

"மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த யாழ் — மாநகர் சோகம் நிரம்பியது அன்று தான். கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர்களுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கவும், வெளி நாட்டு அறிஞர்களை யாழ்நகர மக்கள் காணவும் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டம் வீரசிங்கம் மண்டபத்திற்குள்ளே நடைபெற்றது கொடுமுடி ச. சண்முகன், கனடாவைச் சேர்ந்த செல்வி பிருந்தாபெக் ரோம் நாட்டு அறிஞர் திரு. விக்கி ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் பாராட்டிதழ்கள் வழங்கப்பட்டன:

மண்டபத்தின் உள்ளே நிரம்பியிருந்ததைவிட வெளியேயும் கூட்டம் மலிந்திருந்ததால், மண்டபத்தின் முன்னால் கூட்டத்தை நடத்த முடிவு செய்து கூட்டம் வெளியே நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

கட்டுப்பாடு நிறைந்த மக்கள் யாழ்—நகர மக்கள் என்பது வெள்ளிடைமலை. எந்த நேரமும் அமைதி காத்தனர். மேடையிலுள்ளோர் சொன்னபடி செய்தனர்.

மண்டபத்தின் வெளியே திறந்த கோட்டை மைதான மாதலால் மக்கள் வசதியாக அமர்ந்து கேட்க வாய்ப்பாக இருந்தது.

வெளிமேடையில் பேசுவதற்காக புலவர் செ. இராசு தில்லியைச் சேர்ந்த இரவிந்திர் குமார் சேத். (தாய் மொழி—இந்தி) திருச்சி., ஜமால்மகமது கல்லூரிப் பேராசிரியர் நயினார் முகமது முதலியோர் அமர்ந்திருந்தனர்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் சனார்த்தனமும் மேடையில் இருந்தார். அவர் பேசக்கூடாதென்று போலிசார் கூறுவதாக ஏற்கெனவே பேராசிரியர் வித்தியானந்தம் தெரிவித்திருந்தார். அவரும்பார்வையாளராகவே அமர்ந்திருந்தார்.

முதலில் முதல் நாள் ஊர்வலத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த இருவருக்காக இரண்டு நிமிடம் அமைதி காக்கப்பட்டது. அவ்வளவு மக்களும் துளிசப்தம் இல்லாமல் அமைதி காத்தது புல்லரிக்கச் செய்தது.

அடுத்து பேராசிரியர் நயினார் முகமது அவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அவரது அழகான பேருரையில் மக்கள் மயங்கி இருந்தனர். அபோது திடீரென வேறு ஏதோ ஒலி பெருக்கிக் குரல் தூரத்திலிருந்து வந்து மோதியது. என்னவென்று விளங்கவில்லை அணிவகுத்து வந்த காவலர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர்.

அளவுக்கதிகமாக வீசியதால் நெஞ்சை அடைத்தது. மேடையில் அமர்ந்திருந்தவர்களின் மீதும் வீசினார்கள். தூரத்தில் ஒரு பேருந்தில் உள்ளமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தோர் மீது, பேருந்திற்குள்ளும் வீசினார்;

பறந்து சென்ற மக்களை மிருகத்தனமாக பிரம்பால் அடித்துத் தாக்கினர். நாலாபக்கமும் சிதறி ஓடினர் மக்கள். பலர் மிதிபட்டுத் துயருற்றனர். தாயைப் பிரிந்த குழந்தைகள், கணவனைப் பிரிந்த மனைவியர் போன்றோர் ஏராளம். அருகில் சேறு நிறைந்த குளம் ஒன்று இருந்தது அதில் பலர் விழுந்தனர். செருப்புகளைத் துறந்தனர். பல பெண்கள் புடவைகளை இழந்து ஓட வேண்டியதாயிற்று.

திரமிக்க யாழ்—நகர் இளைஞர்கள் தமக்கு வந்த இடரையும் கருதாது பலரைக் காத்தனர். குளத்தில் விழுந்தவர்களைத் தூக்கிவிட்டனர். தனியாக நின்ற குழந்தைகளைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

கண்ணீர்ப் புகையால் திணறிய இந்திய நாட்டினரை யாழ் நகர் இளைஞர்கள் சூழ்ந்துகொண்டு ஒவ்வொருவரையும் காப்பாற்ற முனைந்தனர்.

புலவர் இராசு அவர்களை வீரசிங்கம் மண்டபத்திற்குப் பின்புறம் இழுத்துச் சென்று சுற்றுச்சுவர் மீது ஏற்றிப் பின்பக்கம் குதிக்க வைத்தனர். குறித்த குதித்த இடம் சாக்கடை, அதிலேயே சற்று தூரம் நடந்து சென்று சாலையேறி, தொடர்ந்து வந்து, எதிரில் வந்த கார் ஒன்றில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அவர்களும் பின்னர் வந்து, இவர் வீடு சேர்ந்ததை உறுதி செய்து கொண்டனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் இனத்தின் விடுதலை காண தீவிரமாக உழைத்திட வாரீர்!!

## தமிழ் மக்களுக்கு கூட்டணி அழைப்பு!

20. 1. 74ல் யாழ்ப்பாணத்தில், தமிழர் கூட்டணி தலைமைச் செயலகத்தில் இளைப்பாறிய நீதியரசர் திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:—

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளான 10. 1. 74 வியாழக்கிழமையன்று வீரசிங்கம் மண்டப முன்றலில் மாநாட்டு அறிஞர்களுக்குப் பிரிவுபசாரம் அளிக்கக் குழுமியிருந்த பெண்கள், குழந்தைகள் உட்படத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தினமீது எவ்வித காரணமுமின்றித் திட்டமிட்ட தாக்குதலை மேற்கொண்டும், கண்ணீர்ப் புகைப் பிரயோகஞ் செய்தும் அவ்விடத்தில் ஏழ்பேர் உயிர் துறப்பதற்கும், பலர் படுகாயம் அடைவதற்கும், தம் உடமைகளை இழப்பதற்கும் காரணமாயிருந்த பொலிசாரின் செயலையும்!—

இத் தாக்குதலினூடு தெறியோடிய மக்களைப் பஸ் நிலையத்திலும், தெருக்களிலும் தாக்கி அங்கு ஒருவர் உயிர் துறப்பதற்குக் காரமாயிருந்த பொலிசாரின் செயலையும்—

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைச் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

அன்றைய தினம் உயிரிழந்தோரின் உறவினருக்குத் தமிழினத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கும் அதே நேரத்தில் —

பாரதூரமாகப் பொறுமையை இழக்கச் செய்யும் சூழ்நிலையிலும், கட்டுப்பாட்டையும், உறுதியையும் கைவிடாது வெளிநாட்டறிஞர்களையும், பெண்கள், குழந்தைகள் முதியோர் ஆகியோரையும் காப்பாற்றித் தத்தம் இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு அரும்பணி புரிந்த தமிழ் வாலிபர்களுக்குத் தமிழர் கூட்டணி தன் பாராட்டைத் தெரிவிக்கிறது.

இச் சம்பவத்தையொட்டி இலங்கை வானொலி தன் செய்தி அறிக்கையில்,

(1) அனுமதியோடு நடைபெற்ற கூட்டத்தை அனுமதியின்றி நடைபெற்றது என்றும்,

(2) தமிழின் சிறப்பைப்பற்றிப் பேசிய பேராசிரியர் நயினார் முகம்மது அவர்களின் பேச்சை மக்களைக் கிளர்ச்சிக்குத் தூண்டும் பேச்சுக்கள் நடைபெற்றதென்றும்.

(3) கூட்டத்தை நிறுத்தும்படி பொலிசார் கூட்ட அமைப்பாளரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர்கள் இணங்கவில்லை என்றும்,

(4) பொலிசார் மீது மக்கள் தாக்கிய காரணத்தினால் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ய நேரிட்டது என்றும்,

நொந்த தமிழினத்துக்கு வேதனை தரும் வகையில் முழுதாகப் பொய்யை ஒலிபரப்பியதை இந் நடவடிக்கைக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இச் சம்பவத்தையொட்டி நீதி விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் உடபகுதித் துணைப் பொலிஸ்மா அதிபர் ஒருதலைப்பட்சமாகப் பொலிசார் நீதியாகவும், கண்ணியத்துடனும் நடந்துகொண்டதாக விடுத்த அறிக்கை, இந் நாட்டின் பொலிஸ் தலைமைப்பீடத்தில் இருந்து தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியாதென்பதை உறுதிப்படுத்துவதாகத் தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு கருதுகிறது.

அமைதியாகக் கலாச்சார விழா ஒன்றில் வெளிநாட்டறிஞர்களின் பேச்சுக்களைக் கேட்கக் கூடியிருந்த மக்கள் மீது நடைபெற்ற தாக்குதலையொட்டிப் பாரபட்சமற்ற பகிரங்க விசாரணை நடத்துமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும், மற்றும் பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனங்களும் விடுத்த கோரிக்கையை இந் நாட்டின் பிரதமர் உதாசீனஞ் செய்து வருவதோடு உயிரிழந்தோரின் உறவினருக்கும், அநியாயமாகத் தாக்குதலுக்கு ஆளாகிய மக்களுக்கும் ஆறுதல் வார்த்தைதானும் கூறாத செயலினால் தான் இந் நாட்டுத் தமிழினத்தின் பிரதமர் அல்ல என்பதை ஊர்ஜிதம் செய்திருப்பதைத் தமிழினம் கருத்திற் கொள்ளவேண்டும் என்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு எம் மக்களைக் கேட்டுக்கொள்கிறது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கின் நான்காவது மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதென்று இலங்கைக் குழு தீர்மானித்த நாளிலிருந்து அம்மாநாட்டைச் சரியாக நடத்தவிடாது அரசாங்கமும், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒரு சில அரசாங்க ஆதரவாளர்களும் எடுத்த கீழ்க்காணும் நடவடிக்கைகளைத் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு கவனத்துக்கு எடுக்கின்றது.

(1) தாம் விரும்பிய இடத்தில் மாநாட்டை நடத்தும் அடிப்படை உரிமை தமிழ் மக்களுக்கு மறுக்கும் வகையில் உதவிப் பாதுகாப்பு வெளிவிவகார மந்திரி கொழும்பில் மாநாடு வைக்கப்படாவிட்டால் வெளிநாட்டு அறிஞர்களுக்கு இந்நாட்டுக்குள் நுழைவு அனுமதி மறுக்கப்படும் என்று கட்டளையிட்டு மாநாட்டிற்குச் சில நாட்களுக்கு முன் அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்தில் இருந்தும் வந்த அறிஞர்களை இறங்க விடாது திருப்பி அனுப்பியமை.

(2) வெளிநாட்டு அபிப்பிராயத்துக்கு அஞ்சி அனுமதி வழங்கச் சம்மதித்தபோதும் வெளிநாட்டு அறிஞர்கள் எல்லோரும் வருவதற்குப் போதிய அவகாசம் அளிக்காத வகையில் கடைசி நேரத்தில் அனுமதி வழங்கியமை.

(3) அரசாங்கம் தன்னுடைமைப்படுத்திக்கொண்ட கூட்டுறவாளர் மண்டபமாகிய வீரசிங்கம் மண்டபத்தில் விழாவை நடத்த முதலில் அனுமதி மறுத்து அதனால் உள்ளூர் பெருமக்களுக்கும் வெளிநாட்டுப் பார்வையாளருக்கும் போதிய முன்னறிவித்தலோடு அழைப்பு அனுப்ப வசதியற்ற நிலையை ஏற்படுத்தியமை.

(4) அரசாங்க ஆதரவாளர்களின் ஆதிக்கத்தில் உள்ள யாழ் மாநகர சபை, நேரத்துக்குத் திறந்த வெளியரங்கைக் கலை நிகழ்ச்சிகளுக்குக் கொடுக்கவும், ஏனைய வசதிகளை மாநாட்டு அமைப்பாளருக்கு அளிக்கவும் மறுத்துப் பின் அரசாங்கம் அனுமதி அளித்த பின் அவற்றை அளித்த காரணத்தினால் மாநாட்டு ஒழுங்குகளில சீர்குலைவு ஏற்படக் காரணமாக இருந்தமை.

(5) 10-1-74 அன்று திரண்டிருந்த பெருங்கூட்டத்தை ஒழுங்காகக் கட்டுப்படுத்தி நடத்துவதற்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டிய பொலிசார், தாமாகவே கட்டுப்பாடாக அமர்ந்திருந்த மக்கள் மீது தாக்குதலை நடத்தி இரத்தக்களரியை ஏற்படுத்தியமை.

இவற்றினாலும் இன்னும் மாநாட்டுக்குக் குந்தகம் விளைக்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளினாலும் இந்த அரசு தமிழினத்தின் அபிலாஷைகளுக்கு என்றும் ஆதரவு தரமாட்டாது என்பதையும் மாறாகத் தமிழ் மக்கள் தம் கலாச்சார வளர்ச்சிக்குத் தாமாக எடுக்கும் நடவடிக்கைகளையும் தடுக்கவே செய்யும் என்பதையும் உணர்ந்து தமிழினம் இவ் ஆட்சியிலிருந்து மீட்சிபெற்று விடுதலை பெற்ற இனமாகத் தலை நிமிர்ந்து வாழும் வகையில் ஓர் அமைப்பைக்காண ஒன்றுபட்டுத் தீவிரமாக உழைக்க முன்வருமாறு எல்லாத் தமிழ்பேசும் மக்களையும் தமிழர் கூட்டணி அழைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கு

# பெப்ரவரி ஒன்பது!

அன்பு நண்பா,

"அமைதியாக இருந்த மக்கள் மீது போலீசார் குண்டாந்தடிகளால் மிருகத்தனமாகத் தாக்கினார்கள்!

சப்பாத்துக் கால்களால் மக்களை உதைத்தார்கள்!

துப்பாக்கியால் சுட்டார்கள்—மின்சாரக்கம்பி அறுந்து விழுந்தது!

தன்னுடைய கைக்கடிகாரத்தைமூன்று போலீஸ்காரர்கள் அடித்துப்பறித்துவிட்டதாக ஒருவர் கூறியிருக்கிறார்!

ஐந்து நிமிடத்திற்குள் 50 கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன;

வெளிநாட்டுத் தமிழ்ப்புலவர்கள் வீற்றிருந்த மேடையை நோக்கியும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் சுடப்பட்டிருக்கின்றன.

துப்பாக்கி அடிப்பாகத்தாலும் மக்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர்!

மாநாட்டுக்குழுவினரும், வெளிநாட்டு அறிஞர்களும் பொலிஸ் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக வீரசிங்கம் மண்டபத்திற்குள் இருந்த நேரம், அம் மண்டபத்திற்குள்ளும் கண்ணீர்ப்புகைக்குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன!

வீரசிங்கம் மண்டபத்திற்குள் அஞ்சியோடிய பெண்களும் ஏனையோரும் நின்றபோது—அங்கும் பொலிசார் சென்று மக்களை அங்கிருந்து வெளியேறுமாறும் இன்றேல் அவர்கள் சுடப்படுவார்கள் என்றும் பயமுறுத்தியுள்ளனர்!

ஒரு பொலீஸ் அதிகாரி தன்னைப் பார்த்து, இந்த ஆளை முடித்துவிடவேண்டும் என்று சிங்களத்தில் கூறியதாக வழக்குரைஞர் இராசராசேஸ்வரன் தங்கராசா கூறியிருக்கிறார்!

ஓடிச்சென்று கொண்டிருந்த மக்களுக்கு முன்னாலும் கண்ணீர்ப்புகைக்குண்டுகள் வீசப்பட்டன. இதனால் பெண்களும் குழந்தைகளும் நிலத்தில் விழுந்தார்கள்!

முகத்தில் காயத்துடன் இரத்தம்வழிய உள்பாவாடையுடனும் சட்டையுடனும் தமிழ் பெண்ணொருத்தி வீரசிங்கம் மண்டபத்தை நோக்கி ஓடிவந்தாள்!

இதே போல பல பெண்கள், தங்கள் சேலைகளை இழந்து உள்பாவாடையுடன், தங்கள் மானத்தை மறைத்திட வழியின்றி அவதிப்பட்டிருக்கின்றனர்!

கைக்கடிகாரங்களைப் பறிக்கொடுத்தவர்கள்— தாலிக்கொடியைக் காணவில்லை யென்ற அவலக்குரல்கள் அங்கு எழுந்தன!

"பொலிசார் திட்டமிட்டே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்!

— அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தின் போது ஏழு தமிழர்கள் இறந்தது சம்பந்தமான மரண விசாரணை இப்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகிறதல்லவா? அந்த விசாரணையின் போது, அன்றைய தினம் நடைபெற்ற பொலிசாரின் அட்டூழியத்தாக்குதல் பற்றி இதுவரை பொது மக்கள் அளித்த சாட்சியங்களிலேயே மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

ஆம் நண்பா, தமிழின் சுவை கேட்பதற்கென வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் சனவரி 10ம்நாள் இரண்ட இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மீது பொலிசார் நடத்திய கொடூரத்தாக்குதலின் அளவு எவ்வளவு பயங்கரமானதாக இருந்திருக்கும் என்பதற்கு பொதுமக்கள் அளித்திட்ட சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்கண்ட சில தகவல்களே போதுமானதாக இருக்கிறதல்லவா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு அவிழ் பதம் பார்த்தாலே போதுமல்லவா?

அடக்கப்பட்ட மக்கள்மீது — அடிமைப் படுத்தப்பட்டுள்ள மக்கள் மீது — ஆதிக்க வெறிபிடித்தோர் எவ்வாறு மிருகத்தனமாக, மிலேச்சத்தனமாக நடந்துகொள்வார்களோ —அதே போலவே தமிழ் மாநாட்டில் கூடிய தமிழ் மக்களை பொலிசார் வெறிபிடித்து தாக்கியிருக்கிறார்கள்!

தமிழ் மொழிக்கு எத்தனை பெரியவிழா எடுத்திடினும்—எத்தனை உலகப் பேரறிஞர்கள் தமிழ் அன்னையில் எழில் கண்டு அதில் மயங்கி, அவளுக்கு அடிமையாகிடினும் — தமிழ் இந்நாட்டின் அரசியல் ஆதிக்க மொழியல்ல— அடிமைமொழிதான்! தமிழினம் ஆளும் இனமல்ல — ஆளப்படும் இனம்தான்! இந்நிலையை மாற்றியமைத்து, தமிழுக்கு அரியணை பெற்று, தமிழை ஆட்சிமொழியாக்கிட தமிழர்களுக்கு அரசியல் சுதந்திரம் வேண்டும் — தனியாட்சிவேண்டும் என்பதையே மாநாட்டின் இறுதிநாளன்று நடைபெற்ற சிங்கள மக்கள் அரசின் பொலிஸ்படை நடத்திய வெறியாட்டம் எடுத்துக்காட்டியிருக்கிறது!

ஈழத்தில் தமிழர்கள் நாய்களைப்போல விரட்டப்பட்டால்—அடிக்கப்பட்டால்— உதைக்கப்பட்டால்—சுடப்பட்டால் — உலகில் ஏனென்று கேட்க யாருமற்ற அநாதைகளாக நாம் இருக்கிறோம்! தமிழகத்தில் நாலரைக் கோடி மக்கள் நம்மவர்கள் இருந்தாலும்— அவர்களும் நமக்காக அங்கிருந்து வெறுமனே குரல் கொடுப்பதைத்தவிர வேறு எந்தவித நடவடிக்கையும் எடுக்கக்கூடிய அதிகாரம் அற்றவர்களாகவேயிருக்கிறார்கள்!

நினைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள்—இன்று அந்தத்தமிழர் தலைவன் மறைந்து ஐந்தாவது நினைவு தினம்— 1961ம் ஆண்டே கூறினார்கள்!

"ஒன்று, தமிழர்கள் கண்ணுக்கெட்டாத தொலைவில் கடல்கடந்து வாழ்ந்தாலும்—அவர்களைப் பற்றிக் கவலைப்படுவது தி.மு.க.தான்!

"நமக்கென்று இருப்பது — இன மரபு அறிந்தது — தி. மு. க. ஒன்றுதான் என்ற உணர்வு அந்தத் தமிழர்கட்கு ஏற்பட்டுள்ளது இரண்டாவது ஆகும்.

மூன்று — அவர்களுக்கெல்லாம் நாம் தரக்கூடியது அனுதாபச் செய்தியும், ஆறுதல் செய்தியும் வாழ்த்தும், நல்லுரையும் தான்!

வீழ்ந்துபட்ட தமிழர்களுக்கும் விரட்டியடிக்கப்படும் தமிழர்களுக்கும் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில் நமது கண்ணீரைக் காணிக்கையாக்குவோம்! விரைவில் இலங்கைத் தமிழர்கள் வெற்றிபெறுவார்கள் என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெற்றிருக்கிறது."

என்று அன்று பேரறிஞர் அண்ணா அவர்களே கூறினார்கள்: நாம் வெளிநாடுகளிலுள்ள தமிழர்களிடமிருந்து அனுதாபத்தையும் ஆறுதல் வார்த்தைகளையும், தார்மீக ஆதரவையும் எதிர்பார்க்கலாமே தவிர நமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு கண்டிடவேண்டும்! நமது கண்ணீரை நாமே துடைத்திட முயலவேண்டும்! நமது விடுதலையை நாமே பெறப் போராடிடவேண்டும்!

ஆம் நண்பா, அத்தகைய உணர்வு நம்மவர்க்கு ஏற்பட்டுள்ளதென்பதை — சனவரி 10ம் நாள் இரவு நடைபெற்ற சம்பவங்களின் காரணமாக 9 பேர் இறந்தார்கள், பலர் படுகாயப்பட்டார்கள்—பல்லாயிரக்கணக்கானோர் கொடுமைக்குள்ளானார்கள் என்பதறிந்ததும்— கொதித்துக்குமுறியெழுந்த தமிழர்கள், வடக்கிலும் கிழக்கிலும், யாரும் கேட்காமலே தாமாகவே இன உணர்வுடன் முன்வந்து சனவரி 11ம் நாள் கடைகளையும் பொது நிலையங்களையும் பூட்டி—கறுப்புக்கொடிகளை உயர்த்தி துக்கம் அனுட்டித்தனர்; ஹர்த்தால் நடத்தினர் என்றால் நம்முடைய தமிழர்களின் ஒற்றுமையுணர்வையும்,விடுதலை உணர்வையும் என்ன சொல்லிப்பாராட்டுவேன்? அந்த அளவுக்கு, ஈழத் தமிழர் சமுதாயம், இன்று தன் நிலையை உணர்ந்த சமுதாயமாக மாறி வருகிறது! உணர்ச்சியுள்ள சமுதாயமாக உருப் பெற்றுவருகிறது!

நடைபெற்ற பொலீஸ் அட்டூழியத்தை எதிர்த்தும், இறந்த ஒன்பது தமிழ்த் தியாகிகளுக்கும் அனுதாபம் தெரிவித்தும் — பெப்ரவரி முதலாம் திகதி மீன்பாடும் தேனாட்டின் தங்கநிகர் இளைஞர்கள்—காசி ஆனந்தன் வழியில் நடைபோடுகின்ற சிங்கேறுகள் — அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினர் — பாடசாலைகளைப் பகிஷ்கரித்து உண்ணாவிரதம் அனுட்டித்து தங்கள் வைராக்கியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்!

இந்நிலையில் நண்பா — எதிர்வரும் சனிக்கிழமை — பெப்ரவரி ஒன்பதாம் நாளுடன் — தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கைத் தமிழர்களின் ஒன்பது தமிழர்கள் — பொலிசாரின் தாக்குதலின் விளைவாக உயிர் நீத்து — 30 நாள் நிறைவு பெறுகிறது! அந்நாளை — ஈழத் தமிழினம் தனது தேசிய துக்கதினமாக அனுட்டித்திடவேண்டும் என்று தமிழர் கூட்டணி தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது!

எதுவித வேண்டுகோளும் இன்றி தாமாகவே சனவரி 11ம் நாளை துக்கநாளாக அனுட்டிக்க முன்வந்த தமிழ் மக்கள், தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுக்கும்போது அதை இன்னும் எவ்வளவு விறுவிறுப்புடன் வெற்றிகரமாக செய்து முடிப்பார்கள் என்பதை நான் அறிவேன்! தமிழர் கூட்டணி இடும் கட்டளை எதையும்—விடுக்கும் வேண்டுகோள் எதையும் —தமிழ் மக்கள் கட்டுப்பாட்டுடன் நிறைவேற்றிவருவதை இந்நாடும் நானிலமும் அறிந்திடும்!

சனவரி பத்தாம் நாள் — இறந்தவர்கள், காயப்பட்டவர்கள் — நம்முடைய இரத்தத்தின் இரத்தங்கள்—சதையின் சதைகள்! அவர்கள் மீது விழுந்த ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு உதையும்—ஈழத் தமிழன் ஒவ்வொருவன் மீதும்—விழுந்த அடியாகும், உதையாகும்! அன்று பல்லாயிரக்கணக்கானோர்பட்ட துன்பங்கள், ஈழத் தமிழ் தேசிய இனம் முழுவதுமே பட்ட துன்பமாகும்!

அன்று உயிர்துறந்தவர்களின் மனைவியர் இழந்த பூமீதும், பொட்டுமீதும், மஞ்சள்மீதும், மங்கல நாண்மீதும் ஆணை! அன்று உயிர்துறந்தவர்களின் உடன் பிறப்புக்கள், அன்னை தந்தையர் உற்றார் உறவினர் வடித்து நிற்கின்ற கண்ணீரின் மீது ஆணை! பெப்ரவரி 9ம் நாளை பூரண துக்கதினமாக நாம் அனுட்டிப்பதுடன் — அன்றையதினம், ஆண்டபரம்பரை மீண்டும் ஒரு முறை ஆளும் நிலைகாணும் போராட்டத்தை— தமிழுக்கும் தமிழர்களுக்கும் உரிமை வாழ்வு காண நடைபெறும் போராட்டத்தை—மேலும் தீவிரமாக்கி; தமிழ்த் தாயின் கண்ணீரை துடைத்திடுவோம்! என்று ஈழத் தமிழன் ஒவ்வொருவனும் அந்நாளில் உறுதி பூண்டிட வேண்டும்!

எனவே பெப்ரவரி ஒன்பதாம் நாள்— தமிழர் கூட்டணியின் வேண்டுகோள்படி— தமிழ் ஈழமெங்கும் கறுப்புக்கொடிகள் உயரட்டும்! கடைகள் எல்லாம் மூடப்பட்டுக்கிடக்கட்டும்! இல்லங்கள், ஆலைகள், கடைகள், வணிக நிலையங்கள், தொழிற்சாலைகள் கிராமமுன்னேற்ற சங்கங்கள், வாசிகசாலைகள், பொது மன்டபங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் எங்கணும் — காணுமிடமெங்கணும் நீக்கமற கருங்கொடிகள் பறந்திடட்டும்! அவை ஆட்சியாளர் தமிழினத்துக்கு இழைத்துள்ள வரலாறு காணாத் கொடுமையை அகில உலகத்துக்கும் பறைசாற்றட்டும்!

ஒவ்வொரு தமிழனும் அன்றைய நாளில், கருஞ்சட்டையோ, கறுப்பு சின்னமோ, கறுப்புத்துண்டோ தவறாது அணிய வேண்டும்!

கோவேந்திகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே அன்று திறந்திருக்கும்! அந்தக் கடைகளின் பக்கமே மக்கள் அன்று செல்லக்கூடாது— அங்குள்ளோர் அன்று இலையான் ஓட்டட்டும்!! தாமாகவே கதவை இழுத்து மூடட்டும்!

மாணவ சமுதாயம் பிரத்தியேக 'டியூசன்' வகுப்புக்களில்கூட பங்குபற்றாது அன்றைய தினம் பூரண துக்கம் அனுட்டிக்கவேண்டும்!

படமாளிகைகள் அனைத்தும் அன்றைய தினம் மூடப்படும் என்றே நினைக்கிறேன். அப்படி மூடப்படாவிட்டாலும் படம் பார்த்திட மக்கள் எவரும் அன்று செல்லாவிடின் தானாகவே அவை மூடப்பட்டுக் கிடக்குமே!

அன்றைய தினம், தமிழர் கூட்டணி ஆங்காங்கே நடத்துகின்ற அனுதாபக் கூட்டங்களில் — கண்டனக் கூட்டங்களில் —தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு தங்களது ஒற்றுமையுணர்வையும் வைராக்கியத்தையும் வெளிப்படுத்திட வேண்டும்!!

கிஞ்சிற்றும் வன்முறை தலைதூக்க இடமளியாமல்—அறவழியில் — அமைதியான முறையில் — பெப்ரவரி 9 துக்க நாளை — ஹர்த்தாலை — ஈழத் தமிழர் சமுதாயம் தமிழ்ஈழமெங்கும் வெற்றிகரமாக நடத்தி முடித்திடும் என்று மெத்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்,

—உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

கடந்த சனவரி 10ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டப முன்றலில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மீது எதுவித முன்னெச்சரிக்கையோ காரணமோ இன்றிப்பொலிசார் திடீரெனெ நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் ஆராய்வதற்கும் —இதற்குக் காரணமாயமைந்த குற்றவாளிகளைக் கண்டு பிடித்திடவும் பாரபட்சமற்ற உயர் மட்ட நீதி விசாரணைக் குழுவொன்றை நியமிக்கும்படி, மேற்படி சோக சம்பவம் நடைபெற்ற அடுத்த விநாடியிலிருந்தே இந்நாட்டுத் தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் கட்சி, அரசியல் வேறுபாடுகளின்றி அரசாங்கத்திடம் கோரி வருகிறார்கள்!

ஆனால் தமிழ் மக்களின் இந்த நியாயமான ஏகோபித்த கோரிக்கை பற்றி அரசாங்கமோ, அரசாங்கத்தின் சிரேட்ட அமைச்சர்களோ இதுவரை வாய் கூடத் திறக்கவில்லை!

இக்கோரிக்கை பற்றி வாய்திறக்காதது மட்டுமல்ல— யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்கள் மீது நடைபெற்ற மிலேச்சத்தனமான பொலீஸ் தாக்குதலை அகில உலகமும் கண்டிக்க முன்வந்த அதே வேளையில், இலங்கை அரசின் பொறுப்பு வாய்ந்த சிரேட்ட அமைச்சர்கள் எவரும் பொலிசாரின் இவ்வெறிச் செயலை கண்டிக்க முன்வராதது மட்டுமல்ல— இதன் விளைவாக உயிரிழந்த தமிழர்களுக்கு—அவர்களின் குடும்பங்களுக்கு—ஒரு அனுதாபச்செய்தியையாவது விடுக்கக் கூடிய அளவு அவர்களது இதயம் திறக்கவில்லை!

'காலரா நோயை உங்கள் மக்கள்தானே கொண்டு வந்தார்கள்—எனவே அவர்கள் துன்பப்படத்தானேவேண்டும்' என்று முன்பு தேசியபேரவையில் நிதியமைச்சர் கூறிய அதே பாணியில்—தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவேண்டும் என்று நீங்கள்தானே பிடிவாதமாக நின்றீர்கள்; இப்போது பொலீஸ் தாக்குதலையும் அனுபவியுங்கள் என்பதுதான் அரசு பின்பற்றும்கொள்கையா என்று கேட்கவிரும்புகிறோம். அதாவது 'பழி வாங்கும் திட்டம்' செயல்படுகிறதா என்பதே நமது கேள்வியாகும்!

யாழ்ப்பாணத்தில் அரசியல் நிலைமை சரியில்லை; அங்கு மாநாடு நடத்தினுல் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவது கஷ்டமாக இருக்கும்! என்று தொடக்கத்திலிருந்தே பாதுகாப்பு துணை அமைச்சர் கூறிவந்தார். ஆனால் இறுதியிலோ வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு தரவேண்டிய பொலிசாரிடமிருந்தே, அவர்களைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு பொதுமக்களிடம் வந்து சேர்ந்தது; பொதுமக்கள் தமது பொறுப்பை சரிவர நிறைவேற்றிவிட்டனர்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் செய்தியில் யாழ் சம்பவங்கள் பற்றித் தரப்பட்ட, ஒரு பக்கச் சார்பான பாரபட்சமான அறிக்கையும், அரசாங்கத்திடமிருந்து இவ்விஷயத்தில் நீதியை எதிர்பார்க்க முடியாதென்பதையே உறுதிப் படுத்துவதாயமைந்தது.

இதன் காரணமாக—யாழ்ப்பாணத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த பிரஜைகள் ஆழ்ந்து ஆலோசித்த பின்னர்—இச்சம்பவங்கள் பற்றி விசாரிப்பதற்கு ஓர் விசாரணைக் குழுவை நியமித்திருக்கிறார்கள். ஓய்வுபெற்ற இரு உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் ஒரு மதத்தலைவரையும் கொண்ட இந்த ஆணைக்குழு, தனது விசாரணையை இம்மாதம் 2ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவிருக்கிறது!

எனவே சனவரி 10ம் திகதி இரவு யாழ்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களை நேரில் கண்டவர்களும் அனுபவித்தவர்களுமான பொதுமக்கள் எதுவித கூச்சமோ அச்சமோ இன்றி தயங்காது இந்த ஆணைக்குழுவின் முன்னர் வந்து சாட்சியமளிக்கவேண்டும்! அன்று நடைபெற்ற உண்மைச் சம்பவங்களை அகில உலகமுமறிய இந்த ஆணைக்குழு உதவவேண்டும்; உதவும் என்று நம்புகிறோம்!

அரசாங்கத்திடம் தொடர்ந்தும் ஆணைக்குழு நியமிக்கும்படி கோரிக்கை விடுப்பதை தமிழ் மக்கள் கைவிட்டுவிட்டு—மாணிக்கவாசகர் ஆணைக்குழுவிடம் தங்கள் சாட்சியங்களை அளிக்க முன்வரவேண்டும்!

இதே வேளையில் அரசாங்கமும் இப்போது ஓர் விசாரணைக் குழுவை நியமிக்க ஆலோசித்துவருவதாக செய்தி ஏடுகள் தெரிவிக்கின்றன.

# மாணிக்க வாசகர் ஆணைக்குழு!

செய்தி ஏடுகளின்படி — அரசு நியமிக்க இருப்பதாக கூறப்படும் விசாரணைக்குழுவின் முக்கிய நோக்கம், பொலிசாரின் அட்டூழியத்தாக்குதல் பற்றியோ அதன் நேரடி விளைவுகள் பற்றியோ, ஆராய்வதைவிட — தமிழாராய்ச்சி மாநாட்டில் அரசியல் கலந்துள்ளதா என்பதைப்பற்றி ஆராய்வதுதானும்!

இது தாடி பற்றியெரியும்போது சுருட்டுக்கு நெருப்பு கேட்பதுபோன்றதாகும்! முக்கிய பிரச்சினையை மூடி மறைத்துவிட நடைபெறும் சூழ்ச்சியாகும்!

மாநாட்டில் எவ்வித அரசியல் பேச்சும் நிகழ்த்தப்படவில்லையென்றும், முற்றிலும் அரசியல் கலப்பற்றே மாநாடு நடந்ததென்றும், சிங்கள பாராளுமன்ற உறுப்பினரும், மாநாட்டில் கலந்துகொண்டவருமான நிக்கவரட்டியா பா. உ. முதியான்சே தென்னக்கூன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் அரசியல் சடுபாடு இருந்ததா இல்லையா என்பதை ஆராய்வதற்கு விசாரணைக்குழு நியமிக்கும்படி தமிழ் மக்கள்யாரும் அரசாங்கத்திடம் கோரவில்லை. எனவே இதுபற்றி விசாரிப்பதற்கு அரசு தன் எண்ணத்துக்கு ஒரு விசாரணைக்குழுவை நியமிக்குமானுல் அதனுல் தமிழ் மக்களுக்கு எந்தவிதமான திருப்தியும் ஏற்படப்போவதில்லையென்பதையும் இத்தகைய கண்துடைப்புக்களால் தமிழ் மக்கள் ஏமாறப்போவதில்லையென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## இந்திரா-சிறிமா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எப்படி தெரிவு செய்யப் போகிறது என்பது இதுவரை தெரியவில்லை. 75,000 பேரும் கட்டாய நாடு கடத்தலுக்குட்படுத்தப்படுவார்களா? அல்லது வேறு எந்த முறை கையாளப்படவிருக்கிறது என்பது வெளியிடப்படவில்லை. அதே நேரத்தில் ஏற்கெனவே சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் எழுந்துள்ள சிக்கல்களுக்கு சிறிமா—இந்திரா பேச்சு எதுவிதத்திலும் தீர்வு கண்டதாகவும் தெரியவில்லை.

★ 1964ம் ஆண்டு சிறிமா—சாத்திரி ஒப்பந்தப்படி—எதுவித பலவந்தத்துக்கும் இடமின்றி — 5¼ இலட்சம் பேரை இந்தியாவும், 3 இலட்சம் பேரை இலங்கையும் ஏற்கவேண்டும்.

★ இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் முறையில், நாடற்ற மக்களிடமிருந்து எவ்வித தூண்டுதலுமின்றி விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது ஆறு இலட்சம் பேர் இலங்கைப் பிரஜாவுரிமையையும், 4 இலட்சம் பேர் மட்டுமே இந்தியப் பிரஜாவுரிமையையும் கோரியுள்ளனர்.

★ பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட மக்கள், எவ்வித பலவந்தத்துக்கும்இடமின்றி தாமே விரும்பி தாம் எந்த நாட்டுப் பிரஜைகளாக விரும்புகின்றனர் என்பதை ஐயந்திரிபற மேற்கண்டவாறுக எடுத்துக் காட்டிய பின்னர் சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் எப்படி இனி நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது என்பதற்கு இரு பிரதமர்களும் எதுவித தீர்வும் காணவில்லை.

★ இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய வம்சாவளிப் பிரஜைகளுக்கும் — ஏனைய இலங்கைப் பிரஜைகளுக்குமிடையே காட்டப்படும் ஏற்றத் தாழ்வுகளும் பாரபட்சங்களும் நீக்கப்படுவதற்கும் இந்திய அரசு உறுதியான நடவடிக்கை எதையும் எடுத்ததாக தெரியவில்லை.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்து பலர் படு காயப்பட்டு பல்லாயிரக்கணக்கானோர் சொல்லொணு வேதனைப்பட்டு, கொடூர பொலீஸ் தாக்குதல் நடைபெற்ற — இப்படி எத்தனையோ சம்பவங்கள் நடந்த நேரத்தில் — அடுத்தடுத்த நாளில் அங்கு செல்லாது — இறந்தவர்களின் உறவினர்களுக்கு நேரில், சென்று ஆறுதல் கூறமுன் வராது — 15 நாட்கள் கழித்து அங்கு சென்றிருக்கிறார்? என்ன தமிழ் மக்கள் மீது அவர் கொண்டுள்ள கருணையின் அளவைப் புரிந்து கொள்ளுங்கள்!

எப்படி அவர் அங்கு போவது? எப்படி தமிழ் மக்களிடம் அவர் முகம் கொடுப்பது? அவரது பொலிசார்— அவரது மக்கள் அரசின் பொலிசார் — தானே இவ்வளவு கொடுமைகளையும் தமிழ் மக்களுக்கு இழைத்திருக்கிறார்கள்?

எனவே பத்திரிகைகள் இப்படிப் போட்டுவிட்டன வேறென்ன எனவோ — யாழ். சம்பவங்கள் குறித்து யார் யாரிடம் குமாரசூரியர் விசாரணை நடத்தியுள்ளார் தெரியுமா? அதையும் பத்திரிகைகளே கூறுகின்றன......அல்பிறட் துரையப்பா, பருத்தித்துறை நடராசா, சி. அருளம்பலம், வினோதன், கே. ரி. இராசசிங்கம், முருகையா ....இத்தியாதி பேர்களுடன் தான்!

... "ஆலோசனை இவர் ... நடத்திக்... ... ... தமிழ் மக்களை இப்... கொண்டுள்ள உணர்ச்

## குமாரசூரியர்...

சியை எப்படி திசைதிருப்புவது? எப்படி தமிழ் மக்கள் மத்தியில் நாம் நடமாடுவது? அதற்கு என்னென்ன தந்திரங்கள் கையாளலாம் என்பது பற்றியதாகவே அது இருந்திருக்கும்.

பாரபட்சமற்ற விசாரணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்கும் என்று தாமே ஏதோ முழு அரசையுமே கொண்டு நடத்துவது போல குமாரசூரியர் யாழ்ப்பாணத்தில் கூறியிருக்கிறார்!

''பாரபட்சமற்ற கமிஷன்'' நியமிப்பதற்கு முன்னர் — குமாரசூரியரின் ஆலோசனையில் இயங்குவதாக கூறப்படும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 11. 1. 74 இரவு பாரபட்சமான முறையில் யாழ் சம்பவங்கள் பற்றி ஒருசெய்தியை ஒலிபரப்பியது. அது வருமாறு:-

''நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றை 8.30 மணியளவில் தடுக்கவேண்டிய நிலைமை பொலிசாருக்கு ஏற்பட்டது. முன்கூட்டியே அனுமதி பெறுமல் அக்கூட்டம் நடைபெற்றது. இன்னுமொரு விடயம் என்ன வென்றுல் இந்தக் கூட்டத்தில் தூண்டுதல் ஏற்படக்கூடிய நிலையில் பேச்சுக்கள் நடைபெற்றன. கூட்டத்தை நிறுத்தும்படி பொலிசார் கூட்ட அமைப்பாளர்களைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர்கள் இணங்கவில்லை. அப்போது பொலிசாருக்கு கல்வீசப்பட்டது''

—என்பதே இலங்கை வானொலிச் செய்தியாகும். அப்பட்டமான இப்பொய்ச் செய்தி இதுவரை அரசாங்கத்தினுல் மறுக்கப்படாத நிலையில்—வானொலி செய்தியில் கூறப்பட்ட கருத்துத்தான் அரசாங்கத்தின் முடிவா என்ற கேள்வியும் நம்முன் எழுகிறது. அதுதான் அரசின் முடிவானுல் — பாரபட்சமற்ற விசாரணையை அவர்களிடமிருந்து தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது.

இதனுல் தான் தமிழ்ப் பிரமுகர்கள், இரு இளைப்பாறிய நீதிபதிகளையும், ஓர் மத குருவையும் கொண்ட ஆணைக்குழுவொன்றை இச் சம்பவங்கள் பற்றி, ஆராய நியமித்துள்ளனர்.

இதே வேளையில், இளைப்பாறிய நீதியரசர்களைக் கொண்ட விசாரணைக்கமிஷன் ஒன்றை நியமிக்கும்படி விடுத்த கோரிக்கையை புறக்கணித்துவிட்டு—ஆரம்பத்திலிருந்தே தமிழாராய்ச்சிமாநாட்டுக்கு எதிராக கருத்துத் தெரிவித்து வந்தவர்களும் மாநாட்டு அமைப்பாளர்களுடன் ஏற்கெனவே பூசல் உள்ளவர்களுமான ஒரு சில ''கனிநிதி''களை கொண்ட ஒரு கண்துடைப்பு கமி... ... ... மாநாட்டு அமைப்பாளர்களையும் ... தமிழ்ப்பிரமுகர்கள் சிலர் சூழ்ச்சி

## இசை அரங்கேற்றம்

பிரபல வழக்கறிஞர் திரு: இ. நமசிவாயம், திருமதி விஜயலட்சுமி நவசிவாயம் ஆகியோரின் புதல்வி செல்வி சகுந்தலாவின் இசை அரங்கேற்றம் பம்பலப்பிட்டிசரசுவதி மண்டபத்தில் 5. 2. 74 செவ்வாய் மாலை 6.30 மணிக்கு நடைபெறும். செல்வி சகுந்தலா, சுழகத்தில் திரு. டி. எஸ். மணி பாகவதரிடத்திலும், சென்னை கலாசேத்திரத்திலும் கர்நாடக சங்கீதம் படித்து வித்வான் பட்டம் பெற்றவர். திரு. இராமநாதன் கிருஷ்ணன், பேராசிரியர் தஞ்சாவூர் எம். தியாகராசன் ஆகியோரிடம் பயிற்சி பெற்றவர் செல்வி சகுந்தலா.

---

திட்டமொன்றை வகுத்துள்ளார்கள் என்று தெரிகிறது.

வெளி உலகுக்கும் விஷயம் புரியாத தமிழ் மக்களுக்கும் கண்துடைப்பு காட்டுவதற்காக— ''பாரபட்சமற்ற கமிஷன்''— என்ற பெயரில், ஏற்கெனவே மாநாட்டு அமைப்பாளர்கள் மீதும், மாநாடு மீதும் தப்பெண்ணமும் காழ்ப்பும் கொண்டவர்களை அரசு நியமிக்குமானுல், அப்படிப்பட்ட கமிஷனை தமிழ் மக்கள் முற்றுகவே புறக்கணித்து ... ... ... ... ... ... ... கூறிவைக்க விரும்புகிறோம் —

## யாழ்ப்பாணத்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சார நிகழ்ச்சி, அந்தக் கூட்டத்திலே புகுந்த பொலிசார் அவ்வளவு பேரும் சிங்களவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

கூடியிருந்த தமிழ் மக்களுக்கு தகவல் தராமல் முள்வேலிக்கு மின்சாரம் பாய்ச்சப்பட்டதாகவும் அதனுல் பலர் இறந்து விட்டனர் என்றும் தெரிகிறது. முன்னறிவிப்பின்றிக் கூட்டத்தினரை கலைக்க பொலிசார் வன்முறையைப் பயன்படுத்தியிருக்கின்றனர். இதனுல் யாழ்ப்பாணத் தமிழர்களேயன்றி இலங்கைக்குவெளியேயிருந்துவந்திருந்த புலவர்களும் காயமடைந்திருக்கின்றனர் என்று அஞ்சுகிறேன்.

இது 1919ல் பஞ்சாப் மாநிலத்தில் நடந்த ஜாலியன் வாலாபாக் கொடுமைக்கு ஒப்பானதாகும். இந்த நிகழ்ச்சி பற்றிய விபரங்களை தனது தூதுவர் மூலம் இலங்கை அரசிடமிருந்து அறிய இந்திய அரசுக்கு உரிமை உண்டு. அது இந்தியப் பிரதமரின் கடமையுமாகும்.

"இந்தக் கடமையைச் செய்யுமாறு தமிழக அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொள்ளவேண்டும். சர்வதேசரீதியிலே உலக மொழியான தமிழ் மொழிப் புலவர்களை அவமதித்திருக்கின்றனர் இலங்கைப் பொலிசார். இந்திய அரசோ, தமிழக அரசோ இதனை அலட்சியப்படுத்துவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமார சூரியர் கதை அளக்கிருர்!

சனவரி பத்தாம் நாள்—நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் பொதுக் கூட்டத்தில — தமிழ் மொழி உணர்வால் உந்தப்பட்டு— வெளிநாட்டுப்பேரறிவாளர்களின் எழில் கொஞ்சும் இன்பத் தமிழ்ப்பேச்சுக்களை செவிமடுத்து நின்றதை குளிர வென யாழ்-வீரசிங்கம் மண்டபத்தின் எதிரே திரண்டிருந்த இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மீது எதுவித முன்னறிவித்தலுமின்றியும், காரணமின்றியும் (சிங்கள) மக்கள் அரசின் ஊழியர்களான பொலிசார் திட்டமிட்டு நடத்திய மிருகத்தனமான, மிலேச்சத்தனமான —குரூரத்தாக்குதலின் காரணமாக — இன்று தமிழுணர்ச்சியுள்ளவன் ஒவ்வொருவனும் — தமிழ் இரத்தம் ஓடும் ஒவ்வொருவனும்— கொதித்துக் குமுறிக்கொண்டிருக்கிருன்.

கட்சி உணர்வுகளை அரசியல் பேத உணர்வுகளை—அத்தனை உணர்வுகளையும் மறந்து —சிங்கள அரசின் பொலிஸ் படை தமிழினம் மீது நடத்திய கொடூரவெறித்தாக்குதலை எதிர்த்து தமிழன் ஒவ்வொருவனும் எரிமலையாகிக் கண்டனக் குரல் எழுப்பி வருகிறன்!

பொலிஸ் தாக்குதலின் விளைவாக தமிழர்கள் உதை பட்டனர்; மிதி பட்டனர்; இடிபட்டனர் அடிபட்டனர்; கண்ணீர்ப் புகையால் திணறித் திக்குமாடினர்; சொத்திழந்தனர்; சொந்த உடமைகளை இழந்தனர்; ஒன்பது பேர் தங்கள் உயிர்களையே இழந்தனர்.

இந்தக் கொடுமைகள் ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டதை எதிர்த்து, இங்கு மட்டுமல்ல — தாய்த் தமிழகம் முழுவதும் எதிர்ப்புக்குரல் கிளம்பியிருக்கிறது. அங்குள்ள அனைத்துக் கட்சியினரும் இந்த அநீதியை எதிர்த்து கண்டனம் தெரிவிக்கின்றனர்; ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

இவ்வாறு எழுந்துள்ள உணர்ச்சிமயமான சூழ்நிலை, இங்குள்ள ஆளுங்கட்சியின் தமிழ் எட்டப்பர்களுக்கு— தாசர்களுக்கு— கிலேசத்தையும் கலக்கத்தையும் மூட்டியிருக்கிறது இனியும் தங்கள் ஏமாற்றுவித்தை—தமிழ் மக்களிடம் எடுபடாது — என்பதை இவர்கள் உள்ளூர உணர்ந்து கிலி பிடித்து அரற்றத்தொடங்கியிருக்கிருர்கள்.

குமாரசூரியரும், அல்பிரட் துரையப்பாவும், ஆ. தியாகராசாவும், அருளம்பலமும், மற்றும் சில குட்டிச் சாத்தான்களும் எந்த அரசாங்கத்தை ஆதரிக்கின்றனரோ—எந்த அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றனரோ—அதே அரசாங்கத்தின் பொலிஸ் படைதான் தமிழர்களை வேட்டையாடியது: தமிழ் பெண்கள் சேலைகளை இழந்து மானபங்கப் படக் காரணமாகியது; அதே பொலிஸ் படைகளின் எதிர்பாரா தாக்குதல் நடவடிக்கைகளின் விளைவிலேயே ஒன்பது தமிழர்கள் தங்கள் உயிரை இழந்தனர்!

இவ்வளவும் நடந்தும் ஆட்சியிலிருந்து வெளியேறி தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாறு காணுத கொடுமைக்கு கழுவாய் தேடக்கூட திராணியற்று— சித்து வருகிறது என்றே— இன்னும் கூறவேயில்லையென்பதை தமிழினம் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

தாம் தமிழ் அமைச்சர் என்ற முறையில் ஒரு போதுமே செயல்படுவதில்லையென்று தேசிய பேரவையில் பகிரங்கமாகவும் தெளிவாகவும் கூறியிருந்த தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர் தான், பிரதமர் தம்மிடம் யாழ் சம்பவங்களுக்கு அனுதாபம் தெரிவித்ததாக ஒரு அறிக்கையில் கூறியிருக்கிருர்!

தமிழ்அமைச்சர்கள் என்ற ரீதியில் செயல்படாத ஒருவரிடம் தமிழ் மக்கள் சார்பில் எப்படி அனுதாபம் தெரிவிப்பது என்பது நமக்கு விளங்கவில்லை!

செல்லையா குமாரசூரியரும், அவரது பரிவாரங்களும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொலிஸ் அட்டூழியத்திலிருந்து தமிழ் மக்களை திசைதிருப்புவதற்காக படி அவரிடம் யாராவது கேட்கவேண்டும் என்று எதிர்பார்த்திருப்பாரா? யாழ் குடாநாடு முழுவதையும் தமிழ் மக்கள் தாமாகவே முன்வந்து — பல ஆயிரம் ரூபா செலவழித்து— அழகுபுரியாக்கி வைத்தார்களேதவிர—யாராவது அப்படிச் செய்யும்படி அவர்களிடம் கேட்டார்களா? குமாரசூரியர், உண்மையில் தமிழ் அன்னையின் புதல்வராக இருந்திருந்தால்,தாமாகவே தமிழாராய்ச்சி மாநாட்டைச் சிறப்பிக்க முத்திரை வெளியிட்டிருப்பார். மற்றவர்கள் கேட்டுத்தான் இதைச் செய்யவேண்டும் என்பதில்லை. தமிழ்மொழியின்மீது கொண்டுள்ள பற்றை, பாசத்தை ஒவ்வொரு தமிழனும் தர்மாகவே வெளிப்படுத்தியிருக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில், குமாரசூரியர் தமிழன்னைக்கு முத்திரை வெளியிட முன்வராததன்மூலம்— தாம் எப்படிப்பட்டவர் என்பதையே துலாம்பரமாக காட்டிக்கொண்டிருக்கிருர்.

மாநாட்டு அமைப்பாளர்கள் அரசாங்கத்தின் ஆதரவை கேட்டுப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறியிருக்கிருர் குமாரசூரியர்! நாம் அறிந்தவரை — தங்கள் சுயமரியாதைக்கு பங்கம் ஏற்படாதவகையில் — மாநாட்டுக்கு அரசாங்கத்தின் ஆதரவையும் உதவியையும் மாநாட்டு அமைப்பாளர்கள் திரும்பத் திரும்பக் கேட்டே வந்திருக்கிருர்கள்.

குமாரசூரியரின் கூற்று உண்மையானல் — இந்த ஞானேதயம் குமார சூரியருக்கும் அவரது அரசுக்கும் ஏற்பட ஏன் இத்தனை காலம் பிடித்தது என்பதே நமது கேள்வியாகும் — யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்துவதற்கு ஆரம்பத்தில் இருந்தே அரசு எதிர்ப்பும் இடைஞ்சல்களும் ஏற்படுத்தியதேன் என்பதே எமது கேள்வியாகும், கொழும்பில்-மாநாட்டை நடத்திஞல் தான் அரசு ஆதரவும்,உதவியும் அளிக்கும் என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்

## 'எல்லாளன்'

டது—தமிழ் மக்களின் சனநாயக உரிமையை குழிதோண்டிப்புதைத்த செயல் என்பதை குமார சூரியர் இப்போதாவது ஏற்றுக் கொள்ளுகிருரா?

குமாரசூரியர் என்னதான் கூறினுலும் — உலக நாடுகளின் அபிப்பிராயத்துக்கு அஞ்சியே அரசு இறுதி நேரத்தில் விசா கொடுக்க இசைந்தது என்பதே உண்மை நிலையென்பது தமிழ் மக்களுக்குப் புரியும்.

பதவிகளுக்கும், சலுகைகளுக்குமாக ஆட்சியாளருடன இன்னும் ஒட்டியிருக்கின்றனர் சுயமரியாதை உணர்வற்ற இவர்கள்!

அப்படி ஒட்டியிருந்து கொண்டுதான் — தமிழ் மக்களின் உணர்ச்சியை தாங்களும் மதிப்பது போலக் காட்டிக்கொள்வதற்காக — 'விசாரணைக் கமிஷன்' வேண்டும் என்று தாங்களும்கோருவதாக இவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டு வருகிருர்கள்!

ஆனல், ஆளுங்கட்சியுடன் ஒட்டியிருந்து வயிறு கழுவி வரும் அடிமைத் தமிழர்கள் சிலரைத் தவிர — ஆட்சியாளர்கள் எவரும் — குறிப்பாக எந்த ஒரு பொறுப்பு வாய்ந்த சிங்கள அமைச்சரும் — யாழ் சம்பவங்களுக்கு இதுவரை அனுதாபம் தெரிவிக்கவோ—பொலிசார் நடத்தையைக் கண்டிக்கவோ—விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படுமெனவோ — நியமிப்பதற்கு அரசு ஆலோ ஏதேதோவெல்லாம் இப்போது பூசிமெழுகத்தொடங்கியிருக்கின்றனர்.

குமாரசூரியரும் அவரது அரசும் தமிழாராய்ச்சி மாநாடு சம்பந்தமாக என்னென்ன செய்தார்கள்; எப்படி எப்படியெல்லாம் நடந்துகொண்டார்கள் என்பதை தமிழ் மக்கள் ஒரு முறை நினைத்துப் பார்க்க வேண்டும்!

குமாரசூரியருக்கு மாநாட்டுக்கு அழைப்பு அனுப்பி அவரது ஒத்துழைப்பையும் ஆதரவையும் மாநாட்டினர் கோரியபோது — அந்த அழைப்பை முற்றுக நிராகரித்து அறிக்கைவிட்டு தமது முகத்தில் தாமே கரிபூசிக் கொண்டவர் குமாரசூரியர்!

அப்படிப்பட்ட குமாரசூரியர்தான் - மாநாட்டையொட்டி விசேட முத்திரை வெளியிடும்படி தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்பாளர்கள் தம்மிடம் கேட்கவில்லையென்றும், கேட்டிருந்தால் வெளியிட்டிருக்கமுடியுமென்றும் கதை அளக்கிருர்!

மாநாட்டை எதிர்த்து அறிக்கைவிட்டு — மாநாட்டு அழைப்பையே நிராகரித்தவரிடம்—மாநாட்டுக்கு முத்திரை வெளியிடும்படி கேட்பதற்கு மாநாட்டு அமைப்பாளர்கள் என்ன குமாரசூரியரைப் போல ரோசம்,சொரணை அற்றவர்களா? மாநாட்டையே எதிர்த்தவர், — கேட்டிருந்தால் மட்டும் மாநாட்டுக்கு முத்திரை வெளியிட்டுவிட்டுத்தான் மறுவேலை பார்த்திருப்பார் என்று நம்புவதற்கு தமிழ் மக்கள் என்ன சர்வமுட்டாள்களா?

சுவாமி விபுலானந்தருக்கும் அறிஞர் சித்திலெப்பைக்கும் முத்திரை வெளியிடப்படும் என்று எவ்வளவு காலமாக கூறப்பட்டுவருகிறது? இதுவரை இன்னும் முத்திரை வெளியிடப்படாததேன்?

குமாரசூரியர் ஒரு தமிழராக இருந்தால் — அவர் உடம்பில் ஓடுவது தமிழ் இரத்தமாக இருந்தால்— [illegible] நடைபெ [illegible] வெளியிடும்

படாதவகையில் — மாநாட்டுக்கு அரசாங்கத்தின் ஆதரவையும் உதவியையும் மாநாட்டு அமைப்பாளர்கள் திரும்பத் திரும்பக் கேட்டே வந்திருக்கிருர்கள்.

ஆனல் அரசாங்கம்தான் மாநாட்டைக் கொழும்பில் நடத்திஞல் மட்டுமே ஆதரவு தருவோம் என்று அறிவித்தது; யாழ்ப்பாண மாநாட்டுக்கு ஆதரவு தர மறுத்தது. எனவே மாநாட்டுக்கு அரசின் ஆதரவு கோரப்பட்டு, அது மறுக்கப்பட்டதென்பதே உண்மையாகும்;

மாநாடு தொடங்கவிருந்தது சனவரி மூன்றும் திகதி. டிசம்பர் 30ம் திகதிவரை, வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கப்படமாட்டாதென்று அரசு திட்டவட்டமாக அறிவித்து வந்தது. 30.12.73-ம் திகதியே வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்தது.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு எந்தச் சூழ்நிலையில் நடைபெற்றுலென்ன — அரசியல் கலப்படம் இருந்தாலென்ன — இல்லாவிட்டாலென்ன — அதைத் திட்டமிட்டபடி நடத்தவும் முடிக்கவும் இந்த நாட்டில் சம உரிமை உள்ளவர்களாகிய தமிழ்மக்களுக்கு வாய்ப்பு அளிப்பது அரசின் கடமையென்று தான் பிரதமருக்கு சுட்டிக்காட்டியதன் பின்னர் தான் 'விசா' வழங்கப்பிரதமர் இசைந்ததாக குமாரசூரியர் கூறியிருக்கிருர்!

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளின் போது பொலிசார் தமிழ் மக்கள் மீது நடத்திய அக்கிரமத் தாக்குதல் முடிவடைந்து — இருவாரங்கள் கழித்து ஆ.ர அமர சனவரி 24ந் திகதி — யாழ்ப்பாணம் போயிருக்கிருர் செல்லையா குமாரசூரியர்.

25. 1. 74ல் புதிய நீதிமன்ற நிர்வாகத்தை தொடக்கி வைப்பதற்காக அங்கு செல்ல வேண்டிய கட்டாயத்திலிருந்த அவர், ஒரு நாள் முன்னதாக சென்றிருக்கிருர். அவருக்கு தாளம் போடும் நாளேடுகள் சும்மா இருந்தால்தானே! சனவரி 10-ம் திகதிய சம்பவங்கள் பற்றி நேரடியாக விசாரிக்கவே தபாலமைச்சர் யாழ்ப்பாணம் வருகிருரென அவை செய்திகள் வெளியிட்டன.

ஏதோ தமக்கு மாலையும் கையுமாக வரவேற்பளிப்பதற்கு யாழ்ப்பாண மக்கள் காத்துக்கொண்டிருக்கிருர்கள் என்ற பிரமையில், 'எனக்கு மாலை வரவேற்பு ஒன்றும் வேண்டாம்' என்று "தண்டோரா" போட்டுக்கொண்டே அங்கே சென்ருர் குமாரசூரியர்!

யாரோ ஒரு கட்சி அமைப்பாளர் எப்படியோ சுடுபட்டதாக செய்தி வந்த போது கொழும்பிலிருந்து விசேட விமானம் அமர்த்தி யாழ்ப்பாணத்துக்கு ஓடோடிச் சென்று அவரைப் பார்வையிட்ட செல்லையா குமாரசூரியர் ஒன்பதுபேர் உயிர்

(7-ம் பக்கம் பார்க்க)



யாழ்நகரில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றிருந்த கண்காட்சியில் ஓர் அங்கமாக இடம்பெற்ற பத்திரிகைக் கண்காட்சியை காண்பதற்கு தமிழ் முனிவர் வண. தனிநாயக அடிகளார் வருகை தந்தபோது, மேற்படி பத்திரிகைக் கண்காட்சியை அமைத்த குரும்பசிட்டி இரா. கனகரத்தினமும் அவரது துணைவியார் [illegible] அடிகளாரை வர[illegible] காட்சி [illegible] கல்லூரி பேராசிரியர் வண. இராசநாயகம் [illegible] காணப்படுகிருர்.


காந்தியடிகளின் கனிமொழிகள்

"மற்றவர்களின் உதவி கேட்டுப்போகும் போது தன் சுதந்திரத்தை விற்பது போலாகிறது."

—மகாத்மா காந்தி.

15மில்க் வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி காந்தியடிகளின் கனிமொழிகள் என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
தபால் பெட்டி எண்.— 77,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு. இராசலிங்கம்
புத்தூர்

கே: குயுக்தியாரே! என்னுடைய பெயர் பலருடைய வாயிலும் அடிபடவேண்டும் என விரும்புகின்றேன். என்ன செய்யலாம்?

ப: சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக நடந்து முடிந்ததே தமிழாராய்ச்சி மகாநாடு! அதைப் போன்ற ஒரு மகாநாட்டை ஏற்பாடு செய்து தமிழின் ஏற்றத்திற்காகப் பாடுபட்டால், அகில உலகிலும் உங்கள் பெயர் பிரபலமடையும். இதைச் செய்ய முடியாவிட்டால், அப்படியான ஒரு மகாநாட்டிற்கு வரும் சனத்திரளை அல்லோல கல்லோலப் படுத்திச் சிதறியோடச் செய்யுங்கள்; உங்களை யாருமே மறக்கமாட்டார்கள்!

ஃ ஃ

இ. கந்தசாமி,
கொழும்பு-6

கே: யாழ்ப்பாணத்தின் சாபக்கேடு என்ன?

ப: ச[illegible] என்பர் பலர்; சதி என்பேன் நான்!

கே: தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு வந்தீர்களா? யாழ்நகரில் தினமும் கூடிய இலட்சோபலட்சம் மக்களைக் கண்டதும் என்ன நினைத்தீர்கள்?

ப: வந்தேன்: தமிழ்த்தாய் பொலிவுடன் வீற்றிருக்கும் திருமிகு காட்சியைக் கண்டேன். ஆளவந்தார் எவ்வளவுதான் அடக்கி ஒடுக்கினாலும், தமிழ் மக்களும் அடங்கி ஒடுங்குவதைப் போற் சிலசமயம் தோன்றினாலும், காலமும், சூழ்நிலையும் சரியாகும்போது அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து எழுச்சி பெறுவர் என்ற நம்பிக்கையை அந்த மக்கள் வெள்ளம் எனக்கு ஊட்டியது!

ஃ ஃ

செல்வி. சரஸ்வதி,
கொட்டாஞ்சேனை.

கே: எங்கள் குடியரசு, புதிய கௌரவப் பட்டங்களை வழங்கவிருப்பதாகச் சொல்கின்றார்களே! என்ன பட்டங்களை வழங்கப் போகின்றது?

ப: அரசாங்கம் தன்னுடைய 'தொண்டரடிப் பொடி'களுக்குத்தானே கௌரவப்பட்டங்களை வழங்கும்? வால்பிடி திலகம், துரோகசிகாமணி, பணிவேந்தன், ஒட்டறைவீரன், எட்டப்பநாயகம், கைக்கூலி மன்னன், சமதர்மச்சொண்டன், பெட்டீசப் பித்தன் போன்ற பட்டங்களை வழங்குவது பொருத்தமாயிருக்கும்!

கே: வடக்கிலிருந்து அரசியல்வாதி ஒருவர் தலயாத்திரைக்காக இந்தியாவுக்குச் சென்றாராமே, என்னவரம் கேட்டிருப்பார்?

ப: கூட்டிக்கொடுக்கும் தன்னைக் காட்டிக்கொடுக்க வேண்டாம் என்று கேட்டிருப்பாரோ!

ஃ ஃ

இராமநாதன்,
மல்லாகம்

கே: 'யாழ். அசம்பாவிதங்களை ஒருவர் விசாரணை செய்கின்றார். தண்டனைக்குரிய குற்றம் யாராவது புரிந்தார்கள் என விசாரணையின் முடிவில் தெரியவந்தால், அரசாங்கம் விசாரணைக் குழுவொன்றை நியமிக்கும். யாழ்ப்பாணத்துப் பிரமுகர்களால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, அவசிய மற்றது: அரசியல் சார்புடையது' என்று அமைச்சர் சூரியர் கூறியிருக்கின்றாரே?

ப: அதே மூச்சில், 'நடந்த அசம்பாவிதங்களைப் பற்றி நேர விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அரசாங்கத்தின் பிரதிநிதியாக வந்திருக்கின்றேன்' என்றும் சொல்லியிருக்கிறாரே, கவனிக்கவில்லையா? நீதவானின் விசாரணை நடந்துகொண்டிருக்கும் போது, அமைச்சர் ஏன் விசாரணை செய்யவேண்டும்? இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகின்ற அமைச்சர் பாரபட்சமற்ற முறையில் அறிக்கை சமர்ப்பிப்பார் என எப்படி எதிர்பார்க்கலாம்?

கே: யாழ். அசம்பாவிதங்களில் உயிர் துறந்தோருக்கு இன்னமும் அனுதாபம் தெரிவிக்கவில்லையே இந்நாட்டின் பிரதமர்?

ப: யாழ்ப்பாணத்தில் வாந்தி பேதி நோய் இருப்பதாகச் சொல்லப் பட்டபோது, 'உங்கள் தமிழ் மக்களுக்குத்தானே நோய் வந்தது. அவர்களே அதன் பலனை அனுபவிக்கட்டும்' என்று உடுவில் கருமருக்குத் தேசியப் பேரவையிற் பகிரங்கமாகப் பதிலளித்த இரட்டைக் கலாநிதியைத் தன் அமைச்சரவையில் வைத்திருக்கும் இந்நாட்டின் பிரதமர், உலகத் தமிழர் அனைவரையும் கலக்கிய இந்த மரணங்களைக் குறித்து ஒரு அனுதாபச் செய்தியாவது வெளியிடாமல், தான் 'சிங்கள மக்களின் பிரதமர்' என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார்!

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது 'ஜாலியன் வாலாபாக்' நிகழ்ச்சியே!

## அது உள்நாட்டுப் பிரச்சினையல்ல சர்வதேச ரீதியான பிரச்சினை!

## சிலம்புச் செல்வர் ம. பொ. சி. கண்டனம்!

13-1-74ல் சென்னை மயிலையில் நடைபெற்ற தமிழர் திருநாள் கூட்டத்தில் தமிழரசுக் கழகத் தலைவரும் தமிழ் நாடு சட்டமன்ற மேலவையின் துணைத் தலைவருமான சிலம்புச் செல்வர் ம. பொ. சி. பேசும் போது இலங்கைத் தமிழர் மீது நடைபெற்ற தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தார். அவர் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழர் திருநாளைக் கொண்டாடும் இந்த நல்ல நேரத்தில் இலங்கைத் தீவின் வடபகுதியில் வாழும் தமிழினத்தாருக்கு — உலக நாடுகளில் இருந்ததெல்லாம் அங்கு வந்திருந்த தமிழ்மொழிப் புலவர்களுக்கு — இலங்கை அரசு இழைத்துள்ள ஒரு தீமை பற்றிய தீர்மானத்தை நானே முன்மொழிகிறேன்.

"இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து வந்த தமிழ்ப் புலவர்களுக்கு பாராட்டு வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் கூடியிருந்த தமிழர் கூட்டத்திலே சிங்களவர் நிறைந்த இலங்கைப் பொலிசார் நடத்தியுள்ள அடக்கு முறையானது சர்வதேச நியதிக்கு ஒவ்வாத இன ஒழிப்பு நடவடிக்கையாகுமென்று இக்கூட்டம் கருதுகின்றது. இந்த அடக்கு முறைக்கு காரணமான இலங்கை அரசை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தமிழரே நிறைந்த கூட்டத்தில் சிங்களப் பொலிசார் நிகழ்த்திய கொடுமைகள் குறித்து இலங்கை அரசிடம் தகவல் கோரும்படி இந்திய அரசை வற்புறுத்துமாறு இக்கூட்டம் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

"யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அடக்கு முறையானது இலங்கையின் உள்நாட்டு நிகழ்ச்சியென்று இந்திய அரசோ தமிழக அரசோ சொல்வதற்கில்லை. உலகத் தமிழ்மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்திருக்கிறது. அந்த மாநாட்டிலே இந்தியாவிலிருந்தும் வந்த தமிழ்ப் புலவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் புலவர்களுக்கு வரவேற்பளிக்க யாழ்ப்பாணத் தமிழர்கள் விரும்பியது கட்சி அரசி[illegible] நாட்டு [illegible] அல்ல சர்வதேச ரீதியான கலா[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரதமருக்கு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றுப்பேச்சையில் கூறியதாவது:-

'தமிழன் என்ற உணர்வோடு வந்தவன் நான். ஆகவேதான் இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்டதும் எனக்கு இரத்தம் கொதிக்கிறது— கண்டனக் குரல் கொடுக்கிறேன்.

அந்தந்த நாடுகளில் நடப்பதற்கெல்லாம் கண்டனக் குரல் எழுப்புபவர்கள் இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில் கண்டனக் குரல் எழுப்பாமல் இருப்பது வேதனைக்குரியது.

'ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கையுண்டு. இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் தமிழன் என்ற இன உணர்வும் இருக்கவேண்டும்.

நம்மை நம்பித்தான் உலகின் பல பாகங்களிலும் தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நம்மைவிட்டால் அவர்களுக்கெல்லாம் வேறு யார் பாதுகாப்பளிப்பது!

எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசும் இந்திய அரசும் தலையிடவேண்டும். இந்திய அரசை தமிழக அரசு தூண்டவேண்டும்.'

மதுரை மாணவர் கண்டனம்

இலங்கையில் 'தமிழர்கள் மீது நடைபெற்ற பொலிஸ் தாக்குதலைக் கண்டித்து மதுரை மாணவர்களும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக 'மக்கள் குரல்' நாளேட்டின் செய்தியொன்று கூறுகிறது. அச் செய்தி வருமாறு:-

'இலங்கையில் தமிழர்கள் படுகொலை விஷயமாக மத்திய அரசு ஏன் பாரபட்சமாக நடக்கிறது என்று மதுரை மாணவர் சமுதாயம் கண்டித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் இலங்கை அரசு நடந்துகொண்ட முறையைக் கண்டித்து மாணவர்கள் ஊர்வலமாக மதுரை கலெக்டர் அலுவலகம் சென்று மனு ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:- 'இலங்கையில் வாழ்கிற தமிழர்கள் தங்களது மொழி, மதம் கல்வி, வேலை வாய்ப்புக்களை இழந்து பட்டினியாய் சாவதை நாங்கள் கண்டிக்கிறோம். தமிழ் மாநாட்டை அனுமதித்து விட்டு, பின்பு தமிழர் மொழி பண்பாட்டை இழித்தும் பழித்தும் கூறி தமிழ் மக்களின் தன்மான உணர்ச்சிகளை மதிக்காமல் நடந்தது தவறு.

"வங்கதேசத்தை காத்த மத்திய அரசு இலங்கைத் தமிழர்கள் படுகொலை விஷயமாக ஏன் பாரபட்சமான நிலையில் செயல்படுகிறதென்று கேட்கிறோம். இதில் உடனடியாக த[illegible] நியாயம் வழங்க மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்."

## தமிழன்னையின் கண்ணீர்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே போல இரவீந்தர் குமார்சேத், நயினார் முகமது, சனார்த்தனம் ஆகியோர் தத்தம் துணிமணிகளை இழந்து பலதுயருற்று பத்திரமாக விடுவந்து சேர்ந்தனர்.

தென்னாப்பிரிக்காத் தமிழர் முதியவர், கையில் அடிபட்டு விடுவந்து சேர்ந்தார்.

மிதிபட்டுக் காயமுற்றோர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அதில் அன்றே 7 பேர் உயிரிழந்தனர். ஒருவர் மாரடைப்பால் இறந்தார் 20 பேருக்கு மேல் படுகாயமுற்றிருந்தனர். அதில் மேலும் 5 பேர் அடுத்த நாள் உயிரிழந்தனர்.

காவல்துறையினர் திரு: சனார்த்தனம் அவர்கள் பேசக்கூடாதென்று சொல்லியிருந்ததாகவும், பேராசிரியர் நயினார்முகமது அவர்களின் பேச்சை தவறாகப் புரிந்துகொண்டு, இரா. சனார்த்தனம் பேசுவதாகக் கருதி கூட்டம் சட்ட விரோதமானதென்று அறிவித்துக் கலைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கூட்டத்தில் குழப்பம் என்பது பச்சைப்பொய். அதற்கு வெகு நேரத்திற்கு பின் வீரசிங்கம் மண்டபத்திற்கு அரை மைல் வெளியே நின்ற பேருந்து எரிக்கப்பட்டது — மக்களால் அல்ல. சமூக விரோதிகளாலும் அல்ல.

எனினும் மேடையில் அமர்ந்திருந்த இந்தியர்களையும், பிற வெளிநாட்டாரையும் யாது காக்க முயலாமல் மேடை மீதும் கண்ணீர்ப் புகை வீசியதைப் போன்ற கொடுமை வேறு இருக்கமுடியாது. மேடையிலிருந்த அறிஞர்கள் தப்பிப்பிழைத்தது தமிழன்னை செய்த தவப்பயனே எனலாம்.

இலங்கைக் காவல் துறையினரின் திட்டமிட்ட கொலை வெறியைக் கண்டித்து இந்திய அரசாங்கம் கண்டனக் குறிப்பு எழுதுவது மிகவும் இன்றியமையாதது.

ஒருவாரம் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்த யாழ் மாநகர் தானாகவே முன்வந்து கடையடைப்புசெய்தது எல்லா வீடுகளிலும் கடைகளிலும் கருப்புக் கொடி பறந்தது. மூன்று நாள் இலங்கையைச் சுற்றிப் பார்க்கும் திட்டத்தைக் கைவிட்டு, அறிஞர்கள் தத்தம் நாடு திரும்பினர்.

யாழ் மாநகரப் படுகொலைக்கு இலங்கை அரசு என்ன விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பதைக் காலம் தான் நிர்ணயிக்க வேண்டும்! தமிழன்னையின் கண்ணீர்த் துளிகள் வீணாவதில்லை!

### அரசியல் இல்லை

தமிழ் மாநாட்டை அரசியல் உணர்வை வளர்க்கப் பயன்படுத்தி விடுவார்களோ என்பதே ஈழத்து அரசின் கவலையாக இருந்தது. அவர்களே வியக்கத்தக்க அளவில் அரசியல் கலப்பே ஏதுமின்றி மாநாடு நடைபெற்றது மாபெரும் வெற்றியாகும்; தமிழ்த் தலைவர்கள் யாரும் கருத்தரங்கு நடக்கும்போது அரங்கிற்கு வரவேயில்லை; அரசியல் தோற்றும் வாய்ப்புள்ள கட்டுரைகள் படிக்கப்படவில்லை. அமைப்பாளர்களைப் பொறுத்தவரை இது மாபெரும் வெற்றியாக அமைந்து விட்டது;

அந்தந்த ஊர்மக்கள் தத்தம் ஊர்களில் பொது வரவேற்பு அளித்து, தமிழறிஞர்களை வரவேற்றனர். அங்கேயும் யாரும் அரசியல் பேசவில்லை. தமிழ்நாட்டார் சில பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு உரையாற்றியபோதும் விழிப்புடன் நடந்துகொண்டனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரதமருக்கு எதிராக 1500 பேர் சென்னையில் ஆர்ப்பாட்டம்!

## கறுப்புக் கொடியுடன் முழங்கியபடியே பாய்ந்து வந்தார் இரா. சனார்த்தனம்!

### சென்னை ஏடுகள் வெளியிட்ட தகவல்கள்!!

இலங்கைத் தமிழர்கள் மீது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளன்று பொலிசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், சென்னை சென்றிருந்த இலங்கைப் பிரதமருக்கு எதிராக சுமார் 1500 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

—இத்தகவலை சென்னையின் பிரபல நாளேடான "அலை ஓசை" வெளியிட்டுள்ளது. இது சம்பந்தமாக அந்த ஏடு மேலும் எழுதியிருப்பதாவது:—

சென்னை வரும் இலங்கைப் பிரதமருக்கு கறுப்புக்கொடி காட்டப்படும் என்று தி. மு. க. பிரமுகரும் உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவருமான சனார்த்தனம் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பையொட்டி இன்று காலை கிண்டி தொழிற் பேட்டை அருகே சுமார் 1500 பேர் கூடியிருந்தனர். அவர்களில் கைகளில் கறுப்புக் கொடிகளுடன் சுமார் 50 பேர் நின்றனர்.

தங்கவயல் எழிலன் தலைமையில் பெங்களூர் தமிழர்கள் பலரும் கறுப்புக் கொடிகளுடன் வந்திருந்தனர். "பிரதமரே திரும்பிப்போ" போன்ற பல்வேறு கோஷங்களை அவர்கள் எழுப்பினார்கள்.

மீனம் பாக்கம் விமான நிலைய வாசலில் சிறிமாவுக்கு எதிர்ப்பாக குரல் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கிண்டி தொழிற் பேட்டை அருகே இலங்கைப் பிரதமரின் கார் வந்ததும் காத்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் முழக்கமிட்டபடி கறுப்புக்கொடி காட்டினார். அவர்களில் சுமார் 25 பேரை பொலிசார் கைது செய்தனர்.

திடீரென்று ஒரு தொழிற் சாலை வாசலிலிருந்து கையில் கறுப்புக் கொடியுடன் எதிர்ப்பு முழக்கம் எழுப்பியவாறு சனார்த்தனம் பாய்ந்தார். உடனே அவரைப் பொலிசார் கைது செய்தனர்.

இலங்கைப் பிரதமருக்கு கறுப்புக்கொடி காட்டப்படுவதை படம் எடுக்க "அலை ஓசை" படப்பிடிப்பாளர் அனுமதிக்கப்படவில்லை. அந்த ஆர்ப்பாட்டத்தைப் படம் எடுத்துக்கொண்டிருந்தபோது எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் பொலிஸ் அதிகாரிகள் பாய்ந்து வந்து காமராவை பறித்துக் கொண்டனர். கூட்டம் கலைந்து ஒரு மணி நேரம் கழித்துத்தான் காமராவைத் திருப்பித் தந்தனர்.

#### கொடும்பாவி

அண்ணா சிலை முன்னர் (22—1—74ல்) இலங்கைப் பிரதமரின் கொடும்பாவியை கொளுத்தப் போவதாக அறிவித்திருந்த தி. மு. க. முன்னாள் செயலாளரும், இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கத்தின் தலைவருமான திரு ஏ. எஸ். மணவைத்தம்பி 21-1-74 நள்ளிரவில் திடீரென்று கைது செய்யப்பட்டார். அவருடன் பர்மா பசார் வியாபாரிகள் சங்கத் தலைவர் யூசுப் மற்றும் சிலரும் கைது செய்யப்பட்டனர்.

சென்னையில் 17—1—74ல் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் பற்றி "அலை ஓசை" ஏடு வெளியிட்ட விபரமான செய்திவருமாறு:

இலங்கை யாழ் நகரில் நடந்த நான்காவது உலகத் தமிழ் மாநாட்டின்போது இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதையும் தமிழ்ப் பெண்களுக்கு நேர்ந்த அவமானத்தையும் கண்டித்து அவர்களுக்குப் பாதுகாப்புக்கோரி சென்னையில் இன்று உணர்ச்சிகரமான எழுச்சி மிகு ஊர்வலம் நடைபெற்றது.

மதுரை மேயர் முத்து, கவிஞர் கண்ணதாசன், இரா. சனார்த்தனம் ஆகியோர் ஊர்வலத்திற்கு தலைமை வகித்தனர். சுமார் 1000 பேர் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

கட்சி சார்பற்ற முறையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக பெங்களூரிலிருந்து புரட்சி அண்ணா தி. மு. க. தலைவர் திப்பொறி நாராயணன் தலைமையில் பலர் வருகை தந்து இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

இன்று காலை 10.30 மணிக்கு பர்மா பசாரில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக பர்மா பசார் கடைகள் முழுவதும் மூடப்பட்டிருந்தன.

ஊர்வலத்திற்கு முன்பு இலங்கையில் நடந்த படுகொலைகள் பற்றியும் இலங்கைத் தமிழர்கள் மீது இலங்கை அரசு ஏவி விடுகின்ற அடக்கு முறைகளின் கொடுமைகள் பற்றியும் உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம் கேட்போரையெல்லாம் எழுச்சிகொள்ளத்தக்கவகையில் வீரமிக்க உரையாற்றினார்:

இலங்கைத் தமிழருக்கு சிறிமாவோ பண்டாரநாயகா அரசு பாதுகாப்பு தருவதில் தயக்கம் காட்டுமானால் தமிழ் இளைஞர்கள் எல்லாம் கொரில்லாக்களாக மாறவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று சனார்த்தனம் கூறியபோது "வாழ்க தமிழினம்" "வீழ்க பண்டாரநாயகா அரசு" என்று உணர்ச்சி முழக்கங்களும் பலத்த கையொலியும் எழுந்தன.

கறுப்புக் கொடி ஏற்றி வைத்து கண்ணதாசன் ஊர்வலத்தை தொடக்கிவைத்து சில கருத்துக்களைக் கூறினார்.

ஊர்வலம் புறப்படத் தொடங்கும் சமயத்தில் மதுரை மேயர் முத்து வந்து சேர்ந்தார். இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் மதுரையிலிருந்து புறப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை மேயர் முத்து கறுப்புக்கொடி ஏற்றியதும் அவர் தலைமையில் ஊர்வலமாக புறப்பட்டது. ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவரும் கறுப்புப்பட்டைகள் அணிந்திருந்தனர்.

உலகத் தமிழ் இளைஞர் பேரவை, எஸ். கே. யூசுப் தலைமையில் பர்மாத் தமிழர் மறுமலர்ச்சி மன்றம், ஏ. எஸ். மணவைத்தம்பி தலைமையில் இலங்கைக் குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்கம், இரா. சக்திவேல் தலைமையில் அனைத்திந்திய பர்மா இந்தியர்கள் சங்கம், மற்றும் கருணாநிதி சிறு அங்காடி வியாபாரிகள் சங்கம், சிறு வியாபாரிகள் முன்னேற்றச் சங்கம், கிறிஸ்தவ சனநாயக முன்னணி, தமிழர் நல்வாழ்வு மன்றம், ஆகியவற்றின் சார்பில் நூற்றுக்கணக்கானோர் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

பர்மா பசார், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் ரோடு



அங்காடிச் சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, வெலிங்டன்பாலம், அண்ணாசாலை, ஆயிரம் விளக்கு, கிறீம்ஸ் சாலை வழியாக இலங்கைத் தூதரகத்தை ஊர்வலம் அடைந்தது.

இலங்கைத் தூதரிடம் மதுரைமேயர் முத்து, கவிஞர் கண்ணதாசன், சனார்த்தனம் ஆகியோர் சென்று தமிழ் மக்களின் சார்பாக மனுக்கொடுத்தனர்.

ஊர்வலத்தில் கீழ்க்கண்ட முழக்கங்கள் எழுப்பப்பட்டன:-

'படையெடுப்போம், படையெடுப்போம் —தமிழனைக் காக்கப் படையெடுப்போம்'!

'படுகொலை செய்த பண்டாரவே! ஆட்சிபீடம் உனக்கு ஒரு கேடா?'

'சிந்தத் தமிழன் சிந்திய இரத்தம்—சிங்கள ஆட்சியை பழி வாங்கும்'

'இலங்கை அரசே! மனிதாபிமானத்தோடு செயல்படு!'

'காட்டாட்சி செய்யும் சிறிமாவோவே! மனித உயிரைக் காப்பாற்று!'

'கொல்லாதே! கொல்லாதே!! மனிதர்களைக் கொல்லாதே!'

'இந்திராவே! இந்திராவே!! இலங்கைத் தமிழரைக் காப்பாற்று!'

'இலங்கைப் பிரதமர் சிறிமாவுக்கு இந்தியா வருகை ஒரு கேடா?'

'பறிக்காதே பறிக்காதே! தமிழர் உரிமையைப் பறிக்காதே!'

'உலகத் தமிழனே ஒன்றுபடு! ஈழத் தமிழனுக்காக குரல்கொடு!'

—மற்றும் பல கோரிக்கைகள் தாங்கிய அட்டைகளை ஏந்தியும் பதாகைகள் தாங்கியும் ஊர்வலத்தினர் சென்றனர்.

'இலங்கை அரசால் மடிந்த தமிழர்களை நினைவுகூரும் வண்ணம் நினைவுச் சின்னச் கல் ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்டது.

#### கண்ணதாசன் வேண்டுகோள்

இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளும்படி அனைத்துக் கட்சியினருக்கும் கவியரசு கண்ணதாசன் விடுத்திருந்தவேண்டுகோளில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

'நான்காவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு இலங்கையில் நடக்கப்போவது அறிந்தபோது நாம் கலந்து கொள்ள இலங்கை அரசு அனுமதிக்காது என்ற நிலையிலும், மாநாடு வெற்றிபெற வேண்டுமென்று ஆர்வத்தோடு இருந்தோம்.

'ஆனால் மாநாடு வெற்றிகரமாக முடியவேண்டிய இறுதி நாளில் வெளிநாட்டறிஞர்கள் வழியனுப்புக் கூட்டத்தில் இலங்கைப்பொலிசார் புகுந்து மிருகத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

'இப்படி உலகில் மொழிக்காக கூடிய மக்களை அடித்து கொலைசெய்ததாக வரலாறு இல்லை. இலங்கை அரசு தமிழ் மக்களை அடிமைகள் போல நடத்தி வருகின்றது. தமிழ் இளைஞருக்கு கல்வி, வேலை வாய்ப்பு மறுக்கப்படுவதோடு பேச்சு எழுத்துச் சுதந்திரமும் பறிக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் தற்போது அவர்கள் தங்கள் தாய்மொழி தமிழ் மீது அன்புகொண்டு மாநாடு நடத்தியதிலும் ஆத்திரமடைந்துள்ளது.

அனைத்துக் கட்சியினரும், அன்புமாணவ நண்பர்களும் இளைஞர்களும் தங்கள் கட்சி வேறுபாடுகளை மறந்து இலங்கைத் தமிழர்களுக்காக தமிழர் என்ற இன உணர்வில் மனிதாபிமான அடிப்படையில் குரல் கொடுக்கவேண்டும்.

'அரசியல் வேற்றுமை எதுவும் இல்லாமல் இந்தப் பிரச்சினையில் முன் நிற்பது இன்றியமையாதது. நமக்கு ருடு. சொரணை இருக்கிறது என்பதை இலங்கை அரசுக்கு காட்டியாகவேண்டும்'—

#### முத்து முழக்கம்

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவுதெரிவித்து—மதுரை திலகர் திடலில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்துக்கு மதுரை மேயர் முத்து தலைமை வகித்

(6-ம் பக்கம் பார்க்க) ...

---

3-2-74 அண்ணாவின் 5வது ஆண்டு நினைவு அஞ்சலி தினமாகும்.

## 'அண்ணா வாழுகின்றார்'



தாரணி மீதினிலே: மிகத்
தாழ்வுற் றிருந்த: எம்
தமிழினத் தலைவியின்
தரமதனை உயர்த்திடவே
மூடக் கொள்கைகளை
மூர்க்கமாயெதிர்த்து
சீர்திருத்தக் கொள்கைகளை
சிந்தனையில் விதைத்து
பகுத்தறிவுக் கொள்கையினை
பாரறியப் பரப்பி
இந்தித் திணிப்பெதிர்த்து
இருட்சிறை பல சென்று
'தமிழ் நாடு' கண்டு
தமிழ் மொழியை யாய்ந்து
கண்ணியம் கடமையுடன்
கட்டுப்பாடாய்த் தமிழ் நாடு
முதல் அமைச்சர் பதவியினை
முற்றுண்டாய் அணி செய்து
தமிழ் நாடு சிறப் பெய்த
தன்னுயிரை தந்துழைத்து
எமதுள்ளக் கோயில்களில் ,
எமது அண்ணா வாழுகின்றார்
அண்ணாவின் பூதவுடல்
அமைதியில் மறைந்தாலும்
மேதினியில் தமிழ் மொழியை
மேன்மையுற நிலை வளர்த்து
தன்மானமுடன் தமிழன்
தரணியினிலே வாழும் வரை
அண்ணாவின் நாமமிந்த
அவனியிலே நிலைத்து நிற்கும்.

—ச. முருகையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


## இப்பொழுது காட்சியளிக்கிறன்

# சென்ட்ரல் (மருதானை) 2, 6, 9.30

ஞாயிற்றுக் கிழமை 10, 2, 6, 9.30

எல்லோரும் எல்லா வயதினரும் எல்லாநேரமும் பார்க்ககூடிய படம்!

- பல ஆயிரக்கணக்கானேரை ஆனந்தத்தில் ஆழ்த்தியது!
- சிரிப்பும், பொழுதுபோக்கும், உள்ளத்தை உருக்கும் கதையம்சமும் கொண்டது:

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ் -நடித்த-

சுஜாத்தா சினி ஆர்ட்சின்

# எங்கிருந்தோ வந்தாள்

( ஈஸ்மன் கலர் )


### கோபாலபிள்ளை ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு அனுப்புவது என்றும் 2. 1. 74 சுழுமணிக்கு நான் கொடுத்த பேட்டியின்படி மேற்கூறிய அரசியல்வாதிகளுக்கோ வேறு எவருக்கோ மாநாட்டுக்கு (அவர்கள் பதிவுப் பணம் கட்டி மற்றைய ஆராய்ச்சியாளரைப்போல் விண்ணப்பித்தாலொழிய) அழைப்பு அனுப்புவதில்லையென்றும் எம்மன்றம் முடிவு செய்தது.

"இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது என்னுடைய பொறுப்பாக இருக்கவில்லை இப்பொறுப்பை இம்மன்றத்தின் வேறொரு முக்கிய உத்தியோகத்தர் ஏற்றுக்கொண்டார். அவரே இப்பொறுப்பைத் தான் விசுவாசத்துடன் நிறைவேற்றியுள்ளதாக 25. 1. 74 வீரகேசரியிலும் 26. 1. 74 தினகரனிலும் ஈழநாட்டிலும் அறிக்கை கொடுத்திருக்கிறார்.

மேலும் பத்திரிகை அறிக்கைகளில் வெளியிடப்பட்ட எம் உறுதிகளேயல்லாமல் வேறொரு அந்தரங்கப் பூர்வமான உறுதிகளும் 'விசா' பெறுவதற்காகப் பிரதமருக்கு எம்மால் அளிக்கப்படவில்லை, என்பதையும் உண்மையில் தமிழ் நாட்டுப் பட மேற்படி வெளிநாட்டுத் தமிழ் மந்திரிகளுக்குத் தொடக்க விழாவுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன என்பது பிரதமருக்கு 29. 12. 73ல் கூறப்பட்டதையும், அதைப்பற்றி அவர் ஆட்சேபனை ஒன்றுமே தெரிவிக்காமல் கருணாநிதி அழைப்பை ஏற்று வர விரும்புவாரேயானால் அவருக்கேற்ற மரியாதைகளையும் பாதுகாப்பையும் அளிக்க ஆயத்தமாக இருக்க வேண்டுமேயென்று அவருடைய அமைச்சின் செயலாளருக்கு உடனே கூறியதையும் உங்கள் வாசகர்களாகிய தமிழ் மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்"

#### ஆசிரியர் குறிப்பு

- தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் ஏனையோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதென்ற இலங்கைக் கிளையினரின் கூற்றை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுகின்றோம். மக்களுக்கு ஏற்பட்டிருந்த ஐயங்களைப் போக்கியதற்காக டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா அவர்களைப் பாராட்டுகிறோம். — ஆர்.


## 2வது வெற்றி மாதம்

| கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ் நகர்) |
|---|---|---|

"சொர்க்கம்" என்பது இறப்புக்குப் பின் ஏற்படுவது அல்ல! இல்லத்தில் நல்வாழ்வும் இன்பமும் நிறைவதே சொர்க்கம்

தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சித்திரம்

சிவாஜிகணேசன், கே. ஆர். விஜயா பாலாஜி, மனேகர், நாகேஷ், சச்சு, எம். ஆர். ஆர். வாசு

ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் தயாரிப்பு

# சொர்க்கம்

டைரக்ஷன் ராமண்ணா — ஈஸ்ட்மென் கலர்



## செல்லமஹால் (யாழ்நகர்) விண்சர்

4வது வாரம்

மேகலா பிக்சர்ஸ் — புரட்சிநடிகர் எம். ஜி. ஆர் அவர்கள் நடிக்கும் கலைஞரின்

# எங்கள் தங்கம்

ஈஸ்ட்மென் கலர்

டைரக்ஷன் கிருஷ்ணன் பஞ்சு — தயாரிப்பு முரசொலி மாறன்



எம். ஜி. ஆர். ஜெயலலிதா ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, அசோகன், சோ, மனோரமா நடித்த

முரசொலி மாறனின் "சந்திரமண்டல விஜயம்" எனும் "கதாகாலட்சேபம்" இசையில் தருபவர்: எம். ஜி. ஆர்.

3 வது வாரம்

## கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

- திலிப்குமார்
- வைஜயந்திமாலா

நடித்த

# பாட்டாளியின் சபதம்

(புத்தம் புதிய கொப்பி)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ இலக்கத்தில் 1974ம் வருடம் பெப்ரவரி மாதம் 3-ந்தி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org